நமது அனுபவத்தால் பல மருத்துவ நூல்களை உணர்ந்து எழுதியவர் விரமமுனிவர் ஆவர். அவருடைய அரிய மருத்துவ அறிவை அவருடைய படைப்பிலக்கியங்களும் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, இளம்பிள்ளை மருத்துவம், லேசர் மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், தொற்றுநோய் மருத்துவம், கண் மருத்துவம் பற்றிய பல நவீன அறிவியல் உண்மைகளை விரமமுனிவர் படைப்பிலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன.

அடிக்குறிப்பு விளக்கம்

1. விரமமுனிவர் தேம்பாவணி, பாடல் 28:54.
2. விரமமுனிவர், வேதியர் ஒழுக்கம், 5-ம் அதிகாரம், பக். 43, 108.
3. நாலாயிரத் திவ்விய பிரபந்தம், பெருமாள் திருமொழி, பாடல் 5:4
4. கம்பராமாயணம், யுத்தக்காண்டம், கும்பகர்ணன் வதைப் படலம், பாடல் 146:1-2.
5. விரமமுனிவர், வேதவிளக்கம், 16-ம் அதிகாரம், ப-210.
6. விரமமுனிவர், வேதியர் ஒழுக்கம், பக். 39.
7. மேலது. 15-ம் அதிகாரம், ப.117
8. விரமமுனிவர் தேம்பாவணி, பாடல் 28:20.
9. மேலது. பாடல் 27:68
10. நாகமுனி நயன விதி, 40-4.

2018-19-9

அ.ஓ.

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது;
சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது.)

VOLUME - VI | சிறப்புப் பதிப்பு | டிசம்பர் 2018

சதக்கத்

ஆய்விதழ்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில்
தமிழ்த்துறை சதக்கத் ஆய்விதழுடன்
இணைந்து நடத்தும்

தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

அறிவியல் தமிழ்

தமிழ்த்துறை வெளியீடு

18.12.2018

SADAKATH – A RESEARCH BULLETIN ISSN NO. : 2347-
(UGC APPROVED JOURNAL NO.64130, INDEXED IN GOOGLE

தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்

பதிப்பாசிரியர்

முனைவர் **ச.மகாதேவன்**

தமிழ்த்துறைத் தலைவர்

இணைப்பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.மு.அயூப்கான்**

இணைப்பேராசிரியர்

முனைவர் **அ.சே.சேக்சிந்தா**

உதவிப்பேராசிரியர்

திரு **ஜெ.குமார்**

உதவிப்பேராசிரியர்

முனைவர் **நா.ஜிதேந்திரன்**

உதவிப்பேராசிரியர்

மற்றும்

முனைவர் **ப.சுடலைமணி**

முனைவர் **கி.இராம்கணேஷ்**

உதவிப்பேராசிரியர்கள்

சரஸ்வதி தியாகராஜா கல்லூரி, பொள்ளாச்சி

தமிழ்த்துறை

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத்நகர், திருநெல்வேலி - 627 011.

18.12.2018

தலைப்பு	:	தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்
பொருள்	:	தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள்
பதிப்பாசிரியர்	:	முனைவர் ச.மகாதேவன் தமிழ்த்துறைத் தலைவர்
இணைப்பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் அ.மு.அயூப்கான் இணைப் பேராசிரியர் முனைவர் அ.சே.சேக்சிந்தா உதவிப் பேராசிரியர் திரு.ஜெ.குமார் முனைவர் நா.ஜிதேந்திரன்
பதிப்புக்குழு உறுப்பினர்கள்		முனைவர் ஆர்.அனுசுயா, முனைவர் வ.மாலிக் இரா.விஜயலெட்சுமி, முனைவர்.மு.ரா.மஜிதாபர்வீன் முனைவர் செல்வ சுகன்யா, திரு. ஞா.அந்தோணிசுரேஷ் உதவிப் பேராசிரியர்கள்
பதிப்பு	:	டிசம்பர் 2018
ISSN : 2347-7644	:	Sadakath Research Bulletin - UGC Approved Journal No.64130, (Vol.VI) Indexed in Google Scholar- ISSN 2347-7644-December 2018 Special Edition
மொழி	:	தமிழ்
தாள், அளவு	:	காப்பியர்,
பக்கங்கள்	:	312
விலை	:	ரூ.350/-
வெளியீடு	:	தமிழ்த்துறை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி) திருநெல்வேலி
கணினி அச்சாக்கம்	:	கா.மானேந்தியப்பன் காசி கணினிக் கலையகம் 41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை செல்பேசி : 9443614556
பொறுப்புத்துறப்பு	:	கட்டுரைகளில் இடம் பெறும் கருத்துக்களும் கல்லூரிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கட்டுரைகளில் இடம் பெறும் கருத்துக்கு அக்கட்டுரையாளர்களே முழுப்பொறுப்பு

ஏன்? எதற்கு? எப்படி? எங்கு? எதனால் எனும் வினாக்கள்
அறிவைத் தூண்டி மனித இனத்தை அடுத்தடுத்து நகர்த்திச் சென்றன.
அறிவியல் பார்வையோடு இலக்கியத்தை அணுகுவதே இன்றைய தேவை.

SADAKATH - A R
(UGC APPROVED JOUR

பாரதியார் கவிதைகளில் அறிவியல் சிந்தனைகள்

[illegible]
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
[illegible] அரசுக் கல்லூரி (தன்னாட்டு)
[illegible]
திருநெல்வேலி – 627 [illegible]

முன்னுரை

அறிவியல் இன்றைய மனிதர்களின் சிந்தனையிலும் செயல்களிலும் புதிய வேகத்தை புகுத்தி புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. ஆதவன் கால் பதிக்காத இடத்தில் கூட அறிவியல் வளர்ந்து நிற்கிறது. ஆதிகால மனிதன் மரத்திலுள்ள இலை தழைகளை உடையாகவும், அவற்றை காய, கனிகளை உணவாகவும், மரக்கிளைகளையும் குகைகளையும் உறைவிடமாகவும் கொண்டான். ஆனால் இன்று நாம் உண்ணும் உணவும், அணியும் ஆடையும் குடிக்கும் நீரும் அறிவியல் வளர்ச்சியே.

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பின ளாம் எங்கள் தாய்"

என்றார் பாட்டுக்கொரு புலவர். உலகம் தோன்றிய நாள் முதலான அனைத்து நிகழ்வுகளையும் அறிந்துள்ளவர்கள் என்பதன் வெளிப்பாடாகும். எங்கும் கால் பதித்துள்ள அறிவியலின் வளர்ச்சி இலக்கியத்தையும் விட்டு வைக்கவில்லை.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகை யினானே"

என்பதற்கேற்ப ஓலைச் சுவடிகளில் இருந்த தமிழ் இன்று ஏட்டுச்சுவடிகளுக்கு வந்து விட்டது. கல்வெட்டு எழுத்துகளும் கணினியில் மாறிவருகிறது.

"கல்தோன்றி மண்தோன்றா காலத்தே
முன் தோன்றிய மூத்தக்குடி"

என்ற பெருமை பெற்ற நம் தமிழ்க்குடியும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ் எழுத்துகளும் நவீனமடைந்ததைப் படிப்படியாக மாற்றி வந்துள்ளன.

"எட்டுத் தொகைகள்
எட்டுத் திக்கும்
சென்றன
பத்துப்பாட்டு
பறைசாற்றியது
தமிழின் தொன்மையை"

சுதந்தொன்மையான தமிழ் இலக்கியத்தில்

"நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற்குழைத்தல்"

என்றுரைத்த பாரதியின் பாடல்களில் காணப்படும் அறிவியல் சிந்தனைகளை இக்கட்டுரை வழி காணலாம்.

ஆய்த எழுத்து
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
UGC • பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது
AN INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES
ISSN : 2278-7550
UGC RECOGNIZED JOURNAL
UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

சான்றிதழ்

எண்கூடம் – 2018

திரு/திருமதி/செல்வன்/செல்வி ஞா.அந்தோணி சுரேஷ்

அவர்களால் எழுதப்பட்ட

கலித்தொகை காதலில் இலக்கண ஆளுமை

என்னும் ஆய்வு கட்டுரை இவ்விதழில் பிரசுரமாகி உள்ளது.

பல்லவி பதிப்பகம்
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில், ஈரோடு – 11.
பேச : 0424-2251545, 94422 51549, 63817 01339
www.pallavipathippakam.in Email:pallavipublications@gmail.com

பல்லவி பதிப்பகம் ★ ஈரோடு-11. ★

2018 - 19 - 10

கலித்தொகை காதலில் இலக்கண ஆளுமை

*ஞா.அந்தோணி சுரேஷ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ரஹ்மத் நகர், திருநெல்வேலி.

முன்னுரை

பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றினைக் காலநிலைகளோடும் கருத்து விளக்கங்களோடும் நமக்கு எடுத்துக்காட்டுவது சங்க இலக்கியங்கள் ஆகும். இவற்றுள் உள்ளம் ஒத்தத் தலைவனும் தலைவியும் ஊழால் ஒன்று கூடித் தாம் துய்த்த இன்பம் 'இத்தகையது' என்று பிறருக்குச் சொல்ல முடியாததாய் உள்ளத்தினுள் அனுபவிக்கும் உணர்ச்சி வெளிப்பாடே கலித்தொகை நூலாகும். இத்தகைய கலித்தொகை காதல் இலக்கண ஆளுமையினை இக்கட்டுரை எடுத்தாளுகிறது.

கலித்தொகையின் சிறப்புப் பண்புகள்

சங்க அகப்பாடல்களுள் கைக்கிளைத் திணையில் அமைந்த பாடல்கள் கலித்தொகையில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. பெருந்திணைப் பாடல்களும் கலித்தொகையில் மட்டுமே இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியத்தில் அகத்திணையியல் முதல் நூற்பா அகத்திணைகள் ஏழு எனச் சுட்டும். 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப' எனும் இவ்விலக்கணத்துக்கு இலக்கியமாய்த் திகழ்வது கலித்தொகை ஒன்றே.

1. யாப்பு வகையால் பெயர் கொண்டது
2. கூற்று வகையால் தனி அமைப்புடையது
3. கூற்றில் இருவர் உரையாடும் போக்கினைக் கொண்டது
4. பிற முல்லைப் பாடல்களில் காணப்பெறாத ஏறுதழுவுதல் இடம் பெற்றுள்ளது
5. கைக்கிளை, பெருந்திணையில் அகப்பாடல்களைக் கொண்டது

ஆளுமை – விளக்கம்

'ஆளுமை' என்னும் தமிழ்ச்சொல் 'Personality' என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. இது person என்ற இலத்தீன் சொல்லிலிருந்து உருவானது "ஒருவரின் உடலமைப்பு, நடந்து கொள்ளும் பாங்கு, ஆர்வம், மனப்பான்மை, திறமை, தொழிலறிவு ஆகியவற்றின் தனித்தன்மை வாய்ந்த ஒருங்கிணைப்பே 'ஆளுமை' என்கிறார் மன்.

காட்சி

சங்க அகப்பாடல்கள் அகமாந்தர் கூற்றாக அமைந்துள்ளதால் அவற்றுள் காட்சிக்குரியவனாகத் துறையளவில் பாடல்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், கலித்தொகையில் தலைவன், தலைவி ஒருவரையொருவர் கண்டு காதல் கொண்ட நிலையை, ஆசிரியர் காட்சித் துறை மூலம் கூற்று வாயிலாக வெளிப்படுத்தினார்.

"கயமல உண்கண்ணாய் காணா ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியவன் வில்லன் வருமென்னன நோக்குபு
முன்னத்திற் காட்டுதல் அல்லது தானுற்ற....." (கலி. 37)

இப்பாடலில் தலைவன் தலைவியைக் கண்டு காதல் கொண்ட தன்மையில் இத்துறை அமைந்துள்ளது.

ஐயம்

"சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப
இழந்துழி இழவே சுட்ட லான"

ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)

முதுகலைத் தமிழாய்வுத்துறை

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது
திருச்சிராப்பள்ளி-620 020.

Since 1951

தேசியக் கருத்தரங்கம்-2018

தமிழ் இலக்கியங்களில் பெண் எழுத்தாளர்களின் படைப்பாளுமை

நாள்: 15.10.2018, திங்கட்கிழமை

சான்றிதழ்

முனைவர்/திரு./திருமதி/செல்வி எ.ா. அந்தோணி சுரேஷ், உதவிப்பேராசிரியர்
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி அவர்கள்
"நேட்டிநேவுதி கவிதைகளில் படைப்பாளுமை"
எனும் கலைப்பில் கட்டுரை வழங்கிச் /

11-10-2018

குட்டிரேவதி கவிதைகளில் படைப்பாளுமை

ஞா.அந்தோணி சுரேஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி),
திருநெல்வேலி-627 011

முன்னுரை

இன்று தமிழ்க்கூறும் நல்லுலகில் எத்தனையோ படைப்புகளும் படைப்பாளர்களும் வாழ்ந்து கொண்டும், பல புதிய படைப்பும், படைப்பாளர்களும் வந்து கொண்டும் தான் இருக்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் சமூகப் பிரச்சினைகளைத் தன் கவிதையின் மூலமாக விமர்சனம் செய்தாலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆணாதிக்கத்தின் கொடுமைகளுக்கும் பெண் ஆளாகி வருகிறார். இத்தகையப் பெண்ணின் பிரச்சினைகள் குறித்து ஆண்கள் கவிதை மூலம் வெளிப்படுத்தி வந்தாலும் பெண்ணின் பிரச்சினையை ஒரு பெண்ணே இவ்வளவு தைரியமாக வெளிப்படையாக சமூகச் சிக்கல்களை உடைத்தெறிகிறார் என்றால் அது கவிஞர் குட்டிரேவதி கவிதை தான். அவரின் படைப்பாளுமை குறித்து இதில் காண்போம்.

பெண் என்பவள் பிரம்மா

ஆண்களால் உருவாக்கப்பட்ட மதங்களும் சாத்திரங்களும், சட்டங்களும், இலக்கியங்களும் பெண்களுக்கு அடிமை விலங்கு பூட்டியே அழகு பார்த்தன. சாக்ரடீஸ் கூட போகத்துக்காகப் படைக்கப்பட்ட பொதுவுடைமைப் பொருள் தான் பெண் என்று குறிப்பிடுகிறார். சட்டப்பூர்வமான வாரிசுகளை வயிற்றில் சுமக்கவும், வீட்டைப் பராமரிக்கவும் ஒருத்தியை மனைவி ஆக்குவோம். பணிப்பெண்களைக் காமக்கிழத்திகளாக வைத்துக் கொள்வோம். அழகு மிகுந்த பெண்களோடு காதல் நாயகனாய் உலா வருவோம். இத்தகைய நிலையினை மாற்றிப் பெண்ணை இறைவனுக்கு நிகராக வைத்துப் பிரசவத்தின் மூலமாக மானுட சமுதாயத்தைத் என்று குட்டி ரேவதி தன் [illegible] குறிப்பிடுகிறார்.

"நீர்ப்பாத்தியில் நிழலேதும் வேண்டாது
தாவர இச்சையின் மிடுக்குடன் எழும்
திரண்ட கவர்ச்சியின் வாழை மான்
குலைதள்ளும் நாளில்
வெட்டிச் சாய்த்தது உமது அரிவாள்
தோலுரித்தது உடல் கிழித்தது
என்றாலும் காலைச் சுற்றிலும்
கணுக்கால் உயரத்தில்
மீண்டும் மீண்டும் முளைத்தெழும்
என் கம்பீரத் தோகைகள்"

என்கிறார்.

சிக்கலை உடைப்பதில் ஆளுமை

பெண் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள் என்று சைமன் டி பௌவர் என்பவர் பெண் குறித்த தன் கருத்தைத் தெரிவித்துள்ளார். பல ஆயிரம் ஆண்டுகளாகப் பெண் என்பவள் ஒடுக்கப்படுவதும் சுரண்டப்படுவதும் அஃறிணைப் பொருளைவிட, கீழான நிலையில் கருதப்பட்டதும் கூடத் தெரியாத நிலையில் இருக்கிறாள். இதனை,

"நீ என்னை வேட்டையாட முடியாத போது
நான் உன்னைக் கோதிக்கொடுப்பேன்
என் இருப்பைச் செரிக்க
முடியாது நீ திணறுகையில்
நீ என் இரையாகத் துடிப்பாய்
உன்னை வேட்டையாடித் தீர்ப்பேன்
இப்படித்தான் பின் நான் பெண்
புலியானதும் நீ ஆண் புலியானதும்"

இத்தகையப் பெண்களைத் நாங்கள் எத்தகைய நிலையில் உள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ள உணர்ந்து கொள்ள வைக்கிறது குட்டி ரேவதியின்

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00 மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2015 பெற்றது.)

பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் கல்லூரித் தமிழ்த்துறை நடத்தும்

தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்–பன்னாட்டுக் கருத்தரங்கம்

சான்றிதழ்

கல்லூரித் தமிழ்த்துறை 18.12.2018 அன்று நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில்

.....நா. அந்தோணி சுரேஷ், உதவிப் பேராசிரியர்.....

.....இலக்கியங்களில் காட்டும் மருத்துவச் சிந்தனைகள்.....

எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது அந்த ஆய்வுக்கட்டுரை பன்னாட்டு ஆய்வுக் குறியீட்டு எண்ணுடன் (ISSN 2347-7644) பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட

சதக்கத் (64130) ஆய்விதழின் சிறப்புப் பதிப்பில் (Vol.VI. Dec.2018) இடம் பெற்றுள்ளது.

2017-18 -12

ச. மகாதேவன்

முனைவர் ச.மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் மு.முஹம்மது சாதிக்
முதல்வர்

இலக்கியங்கள் காட்டும் மருத்துவச் சிந்தனைகள்

[illegible]
[illegible]
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி.

முன்னுரை

நாகரீக வளர்ச்சி பெற்ற தமிழ் மண்ணாடு. நாகரீகம் தோன்றுவதற்கு முன்பே [illegible] மருத்துவக்கலையையும் பெற்றிருக்க வேண்டும். நோய்நாடி வாழ வேண்டுமென்றால் இயற்கையோடு ஒட்டி வாழ வேண்டும். இதைத்தான் சங்க இலக்கிய மக்கள் இயற்கையையும் இயற்கை சார்ந்த பொருட்களையும் சார்ந்தே வாழ்ந்து வந்துள்ளனர். இயற்கையில் கிடைக்கும் செடி, கொடி, [illegible] காய், கனி எனப் பலவற்றைக் கொண்டே மருத்துவம் செய்து அதை நடைமுறைச் சிந்தி காதாயாக வாழ்ந்துள்ளனர். இத்தகைய அரிய தமிழ் மருத்துவச் சிந்தனைகள் இலக்கியங்களில் எங்கெங்கெல்லாம் அமைந்துள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

மருத்துவம் குறித்து அகராதி விளக்கம்

"நோய்க்கான காரணத்தைக் கண்டறிதலையும், நோயைக் குணப்படுத்துதலையும், நோக்கமாகக் கொண்ட சோதனை முறையிலான வழிமுறையே மருத்துவம்" (இ.அண்ணாமலை (பதி) க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (ப.811)) என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது.

"வைத்தியம், பரிகாரம், மருந்து ஒரு வகையால் இவ்வாறான சொற்கள் மருத்துவம் என்பதைக் குறிக்கும் சொல்லாகும்" (ந.சி.கந்தையா (பதி) செந்தமிழ் அகராதி ப.557) என்று செந்தமிழ் அகராதி விளக்குகிறது.

திருக்குறள் காட்டும் மருத்துவம்

மனிதன் காடுகளிலும் குகைகளிலும் தங்கி வாழ்ந்து வந்தான். பல்வேறு பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடி உட்கொண்டான். இதன் காரணமாக அவன் உடலில் பல்வேறு காயங்கள் ஏற்பட்டன. மேலும் உண்ணும் உணவு அளவோடு இருக்க வேண்டும். திருவள்ளுவர் இரண்டு அடியில் மருத்துவத்தின் மேன்மையினை எடுத்து இயம்புகிறார். இதனை,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (பரிமேலழகர் (உரை) திருக்குறள், பா.எ. 948)

உடல் நிலைக்காக உட்கொள்ள வேண்டிய உணவுகளில் காற்று, நீர், உணவு ஆகிய மூன்றில் ஒன்று அதிகமானாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்கிறார்.

ஐங்குறுநூறு காட்டும் மருத்துவம்

உளவியல் அறிஞர் உடல் பாதித்தால் மனமும் மனம் பாதித்தால் உடலும் பாதிப்படையும் என்கின்றனர். அதாவது மனத்தால் உடல் பாதித்தால் அதனை (மனம் - உடல்) சைக்கோ சொமடிக் டிஸ்சார்டர் என்று கி.நாகராஜன் குறிப்பிடுகிறார். இதனையே ஐங்குறுநூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் கூறுகின்றன.

ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)

முதுகலைத் தமிழாய்வுத்துறை

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி-620 020.

Since 1951

தேசியக் கருத்தரங்கம்-2018

தமிழ் இலக்கியங்களில் பெண் எழுத்தாளர்களின் படைப்பாளுமை

நாள்: 15.10.2018, திங்கட்கிழமை

சான்றிதழ்

முனைவர்/திரு./திருமதி./செல்வி மு. நா. மஜிதா பர்வின், உதவிப் பேராசிரியை சதக்கத்துல்வாஜூத் அப்பா கல்லூரி, திருநெல்வேலி அவர்கள் "சங்கப் பெண் கவிஞர்களின் படைப்பாளுமை" எனும் தலைப்பில் கட்டுரை வழங்கச்/ பங்கேற்றுச் சிறப்பித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் மு. ஹறானாரா
உதவிப்பேராசிரியர் &
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

முனைவர் அ. சையத் ஜாகிர் ஹுசைன்
இணைப்பேராசிரியர் &
நிகழ்ச்சித்துறைத் தலைவர் (பொ.)

முனைவர் S. இஸ்மாயில் முகைதீன்
முதல்வர்

சிறப்பிதழ்
Special Issue

மே புரட்டாசி 2040
15 October 2018

ISSN : 2321-0737

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandrasegaran

Editorial Board
Dr. S. Kumaran
Dr. Oppilā Mathivanan
Dr. R. Rajagopal
Dr. Aranga. Pari
Dr. PM. Jamahir
Dr. S. Rajaram
Dr. R. Velmurugan
Dr. S. Chitra
Dr. E.R. Ravichandran
Dr. Ganesan Ambedkar
Dr. K. Thilagavathi
Dr. P. Velmurugan
Dr. G. Sheik Meeran
Dr. P. Selvakumar
Dr. M. Karunanithi
Dr. A. Kaleel Rahman
Dr. A. Senthil Kumar
Dr. S. Tamil Velu
Dr. M. Arunachalam
Dr. R. Vijayarani
Dr. V. Dhanalakshmi
Dr. S. Ramesh
Dr. J. Chandrakala
Dr. C. Prabhakaran
Dr. A. Thoufiq Rameez
Dr. S. Bharathi Prakash
Dr. A. Dharmarajan
Dr. J. Selva Kumar
Mr. D. Alagudurai
Mr. G. Senthil

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்

UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

சிறப்பிதழ் : தேசியக் கருத்தரங்கம்-2018
தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி-620 020, தமிழ்நாடு, இந்தியா

தமிழ் இலக்கியங்களில் பெண் எழுத்தாளர்களின் படைப்பாளுமை

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
Special Issue Editors

முனைவர் மு.ஹு. ஜஹானாரா
உதவிப்பேராசிரியர்

முனைவர் சு. விஜயலெட்சுமி
உதவிப்பேராசிரியர்

முனைவர் ச. பார்வதி
உதவிப்பேராசிரியர்

தமிழாய்வுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620 020.

Published by
RAJA PUBLICATIONS
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

1 பகுதி-2
Part -2

சங்கப்பெண் கவிகளின் படைப்பாளுமை

மு.ரா.மஜிதா பர்வின்
உதவிப்பேராசிரியர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ரஹ்மத்நகர், திருநெல்வேலி

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலன"

(தொல். பொருளியல் : 14)

என்று பெண்மையின் குணநலன்களை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இத்தகைய பெண்களைப் பாடாத புலவர்களும் இல்லை. படைப்பாளர்களும் இல்லை படைப்புகளும் இல்லை. கவிதையையும் கற்பனையையும் எவ்வாறு பிரிக்கமுடியாதோ அதே போன்று பெண்களையும் படைப்புகளையும் பிரித்தறிய முடியாது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பெண் வீரமுடையவளாகவும், விவேகமுடையவளாகவும் சித்தரிக்கப் பட்டிருக்கிறாள்.

சங்க இலக்கியம் தனிமனித உணர்வுகளை, நிகழ்வுகளை, இயற்கையை, சமூகத்தை, வாழ்க்கை முறையை, போர்முறையைப் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. சங்கப் பாடல்கள் தொல்காப்பியம் கூறுகின்ற முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் வாழ்ந்த பெண் கவிஞர்கள் தங்களின் உள்ளக்கிடக்கைகளை இலக்கியமாக வெளிக்கொணர்ந்துள்ளனர். ஆணுக்கு நிகராக பெண்களும் தமது கருத்துக்களை மன உணர்வுகளை முன்வைத்திருக்கின்றனர். அதற்கான உரிமையும் இருந்திருக்கிறது என்பதும் புலனாகின்றது.

'வெள்ளி வீதியார்' என்னும் பெண்பாற் புலவர் பிரிந்து சென்ற தன்னுடைய தலைவன் எங்கு சென்றிருப்பான் என எண்ணி பாடுகின்ற பாடலில் மிக நுட்பமாக தனது உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரும் உளரோரும் காத லோரே"

(குறுந் - 130) என்ற பாடலில் என் தலைவன் நிலத்தைத் தோண்டி அதனுள் புகுந்து விடவில்லை. வானத்தில் ஏறிப்பறந்து எட்டாத தொலைவுக்குச் சென்றுவிடவில்லை. கடலின் ஆழத்திற்குச் சென்றுவிடவும் இல்லை. இந்த நாட்டிற்குள், இந்த ஊருக்குள் தான் ஏதோ ஒரு வீட்டில் இருக்கிறார். வீடு வீடாகத் தேடினால் அவரைக் கண்டுபிடித்து விடலாம். இந்தப் பாடலின் வழியாக வெள்ளிவீதியாரின் மொழி ஆளுமை, சொல்வளம், சொல்லின் ஆழம், கருத்துச் செறிவு மட்டுமல்லாமல் தேடலின் ஏக்கம், வலி போன்ற உணர்வுகளையும் அறிய முடிகிறது.

ஒரு சமூகத்தின் உருவாக்கத்தில் அதன் கட்டமைப்பிற்குள் இருக்கும் பெண்ணின் பங்கு பற்றி சங்கப் பெண்பாற்புலவர் 'பொன்முடியாரின்' பாடலான,

"ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

(புறம் - 312)

ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்துத் தருவது என்னுடைய முதலான கடமை. அந்தக் குழந்தையை நற்பண்புகள் நிறைந்த சான்றோனாக்குவது தந்தைக்குக் கடமை.

ஆய்த எழுத்து
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
AN INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES
ISSN : 2278-7550

சான்றிதழ்

திரு/திருமதி/செல்வன்/செல்வி.....மு.ரா.மஜிதா பர்வின்.....

.....அவர்களால் எழுதப்பட்ட

மனிதப்புணர்ச்சி இயம்பும் தொல்காப்பியம்.....

.....

என்னும் ஆய்வு கட்டுரை இவ்விதழில் பிரசுரமாகி உள்ளது.

பல்லவி பதிப்பகம்
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில், ஈரோடு – 11.
பேச : 0424-2251545, 94422 51549, 63817 01339
www.pallavipathippakam.in Email:pallavipublications@gmail.com

பல்லவி பதிப்பகம் ★ ஈரோடு-11. ★

ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் - 2018

16

visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

மனிதப்புணர்ச்சி இயம்பும் தொல்காப்பியம்

*மு.ரா.மஜிதா பர்வின், முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுதிகளாக இலக்கணத்தை விளக்குகிறது. பொருளோடு சேர்ந்திருந்தது யாப்பு வடிவம். பின்பு தனியே யாப்பு நூல்கள் தோன்றியதால் இலக்கணம் நான்கு பகுதிகளானது.

பொருளதிகாரத்திலுள்ள உவமவியல், மெய்ப்பாட்டியலானது பின்னாளில் வளர்ச்சியடைந்து அணியிலக்கணமாக மலர்ந்தது. இது ஐந்தாவது பகுதியாக உருவானது. இவ்வாறு ஐந்திலக்கண மரபு தமிழில் வளர்ந்தது. எழுவகை யாப்பு, எண் வகை வனப்பு பற்றிய வகைமை இலக்கணமே, பிற்காலத்தில் பாட்டியல் நூல்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. உயிரியலும் மரபியலும் தந்த வளர்ச்சியே நிகண்டு வகைகளானது. இவ்வாறு தொல்காப்பியம் கால வளர்ச்சிக்கேற்ப புதிய இலக்கியங்கள் இலக்கணங்கள் தோன்ற அடித்தளமாக அமைந்தது.

தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள், இலக்கிய நூல்கள், சிற்றிலக்கியங்கள், பாட்டியல் நூல்கள் மட்டுமல்லாது இளம்பூரணர், பேராசிரியர் போன்றோரின் உரைகளும் தொல்காப்பியம் வழி வந்தவையே. மூலத்தை விளக்கியும், அதன் பிற்கால வளர்ச்சியை எடுத்துக் கூறியும், தத்தம் கால வளர்ச்சி நிலைகளை உணர்த்தியும், மரபு மாற்றம், பண்பாட்டுப் பழக்கவழக்க மாற்றம், மொழிப் பயன்பாட்டு மாற்றம் என காலமாற்றத்திற்கு ஏற்ப மாற்றங்களை உட்படுத்தி எழுதப்பட்டவையாகும். அந்த வகையில் தொலகாப்பிய எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் பிறப்பினைக் கூறி அந்த எழுத்துகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து புணரும் விதத்தினையும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

சொற்கள் ஒன்றோடு ஒன்று இணையும் போது புணர்ச்சி நிகழ்கிறது. அதேபோன்று ஆணும் பெண்ணும் இணையும் போது புணர்ச்சி நிகழ்கிறது. இவ்விரு புணர்ச்சிகளுக்குப் பின் தோன்றுகின்ற எழுத்துகளுக்கும் உயிர்களுக்கும் இடையே நிகழ்கின்ற அறிவியல் செயல்பாட்டு நிலையை இக்கட்டுரை விவரிக்கின்றது.

தமிழ் மொழியில் எழுத்துகள் முப்பத்து மூன்று. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பனிரெண்டு உயிர் எழுத்துகளும், க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு மெய் எழுத்துகளும் சேர்ந்து முப்பது எழுத்துகளாகும். அவற்றோடு, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்று சார்பு எழுத்துகளும் சேர்த்து மொத்தம் முப்பத்து மூன்று எழுத்துகளாகும்.

முப்பத்து மூன்று எழுத்துகளில், இருபத்தியிரண்டு எழுத்துகள், அதாவது அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பனிரெண்டு உயிர் எழுத்துகளும், க், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் ஆகிய ஒன்பது மெய் எழுத்துகளும், மொழி முதல் குற்றியலுகரம் என ஒரு சார்பு எழுத்தும், ஆக மொத்தம் இருபத்து இரண்டு எழுத்துகள் மொழிக்கு முதலில் வரும்.

முப்பத்து மூன்று எழுத்துகளில், இருபத்து நான்கு எழுத்துகள், அதாவது, அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பனிரெண்டு உயிர் எழுத்துகளும், ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய பதினொரு மெய் எழுத்துகளும் நிலைமொழி ஈற்று குற்றியலுகரம் என ஒரு சார்பு எழுத்தும், ஆக மொத்தம் இருபத்து நான்கு எழுத்துகள் மொழிக்கு இறுதியில் வரும். இதனை,

"மூன்றுதலை யிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலாகு இருபத்து
அறுநான்கு ஈற்றோடு நெறிநின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்

ISSN 2454-3993

▪ மலர் 3 ▪ சிறப்பிதழ் 1 ▪ திசம்பர், 2018

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

பதிப்பாசிரியர்கள்

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

தொகுதி - 2

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
தமிழ் உயராய்வு மையம், மதுரை-18

மலையாளப் பல்கலைக்கழகம்
இந்திய ஆய்வியல் துறை

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து வெளியிடும் பன்னாட்டுக் கருத்தரங்கு

தற்காலத் தமிழ் இலக்கியங்களின் நோக்கும் போக்கும்

UGC Approved Journal Number 40729 | VOLUME 3 | SPECIAL ISSUE 1 | DECEMBER 2018

Shanlax International Journal of Tamil Studies

A Peer-reviewed, Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP
OJS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editor@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

இசுலாமியப் புதினங்கள்: ஆளுமைகளும் ஆக்கங்களும்

முனைவர் அ. மு. அயூப்கான்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ஏற்மதநகர், திருநெல்வேலி

முன்னுரை

தமிழ் இலக்கிய வெளியில் பன்னெடுங்காலமாகப் பல்வேறு சமயத்துப் படைப்பாளிகள் தங்களது பங்களிப்பினைத் திறம்படச் செய்து வந்துள்ளனர். குறிப்பாக சமணம், பௌத்தம், வைதீகம், சைவம், வைணவம் என்பதோடல்லாமல் அயல் தேசக் கிறித்தவம், இசுலாம் சமயங்களைச் சார்ந்தும் இலக்கிய முகிழ்ப்புகள் தமிழ்ச் சூழலில் நடந்தேறியுள்ளன.

காலங்காலமாகப் படைப்பாளிகள் சமயங்கள் சார்ந்து சமயத்தின் துணை வழியாகக் கொண்டே படைப்புகளைப் படைத்துள்ளனர் எனலாம். படைப்புகளில் ஏதோ ஒரு வழியில் சமயச்சாரம், சமூகத் துணைநிலை, பண்பாட்டு வெளி என்பதான ஆழ்நிலைகளில் நின்று ஒலித்துக் கொண்டே உள்ளன. இது இசுலாமியப் படைப்பிற்கும் விதிவிலக்கல்ல. இசுலாமியப் படைப்பு வெளிச் சமயங்களுக்கு மாறுபட்டும் உடன்பட்டும் வெளிவந்துள்ள நிலையில் இசுலாமியப் படைப்பாளிகளும் அவர்கள் படைத்த படைப்பு வெளிகளையும் ஆய்வது, குறிப்பாகப் புதினங்களைப் படைத்த இசுலாமியப் படைப்பாளிகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

புனைவிலக்கிய இசுலாமியப் படைப்பாளிகள்

20ஆம் நூற்றாண்டில் இசுலாமியப் புனைகதை எழுத்தாளர்களுக்கு முன்மாதிரியாக விளங்குபவர் 'அசன்பே சரித்திரம்' என்னும் புதினத்தை எழுதிய சித்திலெப்பை மரைக்காயர் ஆவார். இவர் எழுதிய 'அசன்பே சரித்திரம்' முதல் இசுலாமியப் புதினமாகத் திகழ்கின்றது. இதுவே ஈழத்தமிழ் முதல் புதினமும் ஆகும். இவருக்குப்பின் நாகூரில் பிறந்த சித்தி ஜுனைதா பேகம் எனும் பெண் இசுலாமிய எழுத்தாளர் 'காதலா? கடமையா?' (1938) 'செண்பகவல்லி தேவி அல்லது தென்னாடு போந்த அப்பாஸிய குலத்தோன்றல்', 'மகிழம்பூ' ஆகிய புதினங்களையும் பல்வேறு கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

"நான் என் எழுத்துலக நுழைவிற்கு எனக்கு முன்மாதிரியாக யாரையும் பின்பற்றவில்லை. எனது சிறுகதை, நவீனம் எல்லாம் இயல்பாக எனக்கு அமைந்த சொந்த நடை என்றே நினைக்கிறேன். நான் முதன் முதலில் எழுதிய நெடுங்கதை காதலா? கடமையா? என்பது. இந்த நவீனத்தை நான் எழுத எந்தக் காரணமும் எனக்கில்லை. நான் எழுத வேண்டும் என்ற எனது சொந்த அவாதான்"[1] என்று பேகம். அவரளித்த நேர்காணலில் கூறியுள்ளார்.

இவரே இசுலாமிய இலக்கியத்தில் முதல் பெண் எழுத்தாளராகவும் கருதப்படுகிறார். இந்தக் காதலா? கடமையா? எம்.ஜி.ஆர் நடித்து 'நாடோடி மன்னன் என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்துள்ளது. ஆனால் இது என்கதை என்று இவர் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. மேலே கூறிய இவ்விருவருக்குப் பின் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இசுலாமியப் படைப்பாளிகள் வெளியே தெரியவில்லை.

எண்பதுகளுக்குப் பின் புதின வளர்ச்சி

1988 ஆம் ஆண்டில் தோப்பில் முகம்மது மீரானால் எழுதப்பட்ட "ஒரு கடலோர கிராமத்தின் கதை" இசுலாமியப் புனைவிலக்கியம் வளர வழிகோலியது. அதுமட்டுமின்றி புதிய இசுலாமியப் படைப்பாளிகளுக்கு முன்னோடியாகவும் விளங்கியது. இசுலாமியர்களின் சமயம் சார்ந்த வாழ்வியலை இப் புதினம் வெளிப்படுத்தி உள்ளதைத் தி.க.சிவசங்கரன்,

"முதல் உலகப்போர் முடிந்த காலத்தில் குமரி மாவட்டத்திலுள்ள கடலோரக் கிராமம் ஒன்றில் வாழ்ந்த இசுலாமிய மக்களை, அவர்களுடைய நம்பிக்கைகளை, சமய வாழ்க்கையை, சுத்த சுயம்புவாக இந்நாவல் சொல்கிறது[2] என்கிறார்.

மேலும் இப்புதினம் ஐம்பது முதல் நூறு ஆண்டுகளுக்கு முந்தைய கதை நிகழ்வுகளையும் காலப் பின்னணியையும் கொண்டதாக விளங்குகின்றது. இவரின் பிற புதினங்களான துறைமுகம் (1991) கூனன் தோப்பு (1993) சாய்வு நாற்காலி (1975) (1997ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றப் புதினமாகும்) அஞ்சு வண்ணம் தெரு (2000) ஆகிய புதினங்கள் இசுலாமிய வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன.

2018-19-16

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது;
சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது.)

VOLUME - VI | சிறப்புப் பதிப்பு | டிசம்பர் 2018

சதக்கத்

ஆய்விதழ்

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில்
தமிழ்த்துறை சதக்கத் ஆய்விதழுடன்
இணைந்து நடத்தும்

தமிழ் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

அறிவியல் தமிழ்

தமிழ்த்துறை வெளியீடு

18.12.2018

SADAKATH – A RESEARCH BULLETIN ISSN NO : 2347-7644

தமிழ் இதழ்களில் அறிவியல் செய்திகள்

முனைவர் அ.மு.அயூப்கான்,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,(தன்னாட்சி)
ரஹ்மத்நகர், திருநெல்வேலி - 627 011

மனிதன் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் ஒப்பிட்டு வியந்து பார்க்கும் பொழுதே அறிவியல் அறிவு சிறந்து விட்டது. காலங்கள் செல்லச்செல்ல வாழ்வின் தேவையைக் கருதி மனிதன் தன் பயன்பாட்டிற்காக ஒவ்வொன்றையும் உற்றுநோக்குகிறபோது அன்றாடம் அறிவியலின் தேவையை உணர்ந்து கொண்டான். அவனது தேவையின் அடிப்படையில் அறிவியல் அறிவும் வளர்ச்சி பெற்றது "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது முன்னோர் மொழி அணுவன்றி பாதொன்றும் அசையாது என்பது அறிவியில் மொழி

ஆதிகாலத்தில் இயற்கையை ஆராயத் தொடங்கிய மனிதனுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. ஒன்றாய் இருந்த விதை பின்பு வேராய், அடிமரமாய், கிளையாய் கொம்பாய், இலையாய், பூவாய், காயாய், கனியாய் என்று பலவகையான மாற்றம் பெறுவதுபோலவே விதையாக இருந்தவை மரமாக மாற்றம் பெறுகின்றன. இதை மாணிக்கவாசகர் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி" என்று பாடியிருக்கின்றார். இயற்கையை அழகியல் நோக்கில் மட்டும் காணாது அறிவியல் நோக்கில் காணுகின்ற பரந்துபட்ட அறிவியல் அறிவு இருக்கின்ற நிலையில் அறிவியல் வளர்ச்சி என்பது தானாகவே உரமின்றி வளரும் செடிபோலச் செழித்து வளரும்.

இன்றைய நவீனத் தொழில்நுட்பங்களுடன் அறிவியலின் நதி மூலங்களாகத் திகழ்பவர்கள் அறிவியல் அறிஞர்கள்தான். நவீனச் சிந்தனைகள் வழி வாழ்வியலுக்கு உகந்த உபகரணங்கள், சாதனங்கள், கருவிகளை வடிவமைக்கவும் மனித சமுதாயத்திற்கு நன்மை உண்டாக்க முயல்வது தான் அறிவு வளர்ச்சி

"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தன் நோய் போல் போற்றாக் கடை" (குறள்: 315)

என்பது திருவள்ளுவர் வாக்கு. வாழ்க்கையில் அழிவு ஏற்படாமல் காக்கின்ற கருவியாகவும் நல்லவற்றை ஆராய்ந்துணரும் புலனாகவும் வருமுன்னர் காக்கின்ற ஆயுதமாகவும் திகழ்வது அறிவாகும்.

அறிவில் மேம்பட்டோரை இவ்வுலகம் பாராட்டி தனிச்சிறப்பு அளிக்கும் "அறிவுத் துறையில் காலத்திற்குக் காலம் வேறுபடுதல் போல் ஒரே காலத்தில் மனிதருக்கு மனிதர் வேறுபடுதல் உண்டு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அறிவுத்துறையில் மிக்கும் குறைந்தும் விளங்குகின்றனர்" என்று மு.வ. குறிப்பிடுகின்றார். (இலக்கியத்திறன் ப.80)

அறிவியல் செய்திகளைத் தாங்கி வரும் இதழ்கள் தமிழில் மிகுதியாக இருக்கின்றன. அவற்றில் கலைக்கதிர் அறிக அறிவியல், விஞ்ஞானச் சுடர், மருத்துவமலர், ஹெல்த் டுடே பசுமை விகடன், சுற்றுச்சூழல், புதிய கல்வி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அறிவியலின் பல்வேறு துறைகள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டு வெளிவந்த இதழ்களைத் துறை சார்ந்த அறிவியல் இதழ்கள் எனலாம். தமிழில் இதுவரை வெளிவந்துள்ள துறை சார்ந்த அறிவியல் இதழ்கள் , மருத்துவ அறிவியல் இதழ்கள், வேளாண் அறிவியல் இதழ்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

வேளாண்மை:

தமிழகத்தில் சங்க காலத்தில் சில நிலப்பகுதியில் வேளாண்மை சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ளது என்பதைப் பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

International Journal of Tamil Language and Literary Studies

பாலகுமாரன் சிறுகதைகளில் காலம்

முனைவர் அ.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாவும் அகமது கல்லூரி,
திருப்புவனம்.

முன்னுரை

காலம் பொன் போன்றது. வரலாற்று வாழ்க்கையில் மட்டுமல்ல சிறுகதை இலக்கியத்திலும் தான் அதன் விலையாகவே பொன் போன்ற மேனாட்டவர் உரிய காலத்தில் செய்யாமல் காலம் கடந்த பின்னர் வருத்தப்படும் பண்பினைக் சிறுகதை இலக்கியத்திலும், வரலாற்று வாழ்விலும் தான் அதிகம் காண்கின்றோம்.

சிறுகதையின் தன்மைக்கு முழுமை கருவாகிய ஒன்று காலம், களம், இடம் பொருள் ஒரு சிறுகதையைப் படைக்க முனையாது. சிறுகதையிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காலம் இடம் பெற்றிருக்கும். நாவிச்சுழற்றி படைப்பதன் மூலம் ஆல்டஸ் ஹக்ஸ்லி டக்கட் மிஸ்டேர் அவர்கள் "வந்து ஒரு படைப்பாளரும் தான் வாழ்கின்ற காலத்தை முழுமையாகப் புறக்கணித்து விடுவதில்லை. ஆயினை அறிந்தோ அறியாமலோ கூட வாழும் காலத்தின் சாயல் அவன் படைப்பில் பதிந்து விடுகிறது" என்கிறார். மேலும் சிறுகதையின் காலம் பற்றி சீக. செல்லப்பா கூறும் போது "காலம் சிறுகதையை அழகான விநாடியாக, உணர்வு கணங்களாக மின்னிச் செல்லும் வண்ணங்களாகத் தொனிக்க வேண்டும். சிறுகதையில் மொழியை அழகாக, நாசுக்கு குறைந்த உணர்வு, இசை நயமான பாதித்தும், ஐந்து நிமிடம் ஆயிற்று, ஒரு நாள், ஒரு மணியை என்று அவருக்கு நினைக்கவே தோன்றாத படியான மனநிலையை ஏற்படச் செய்ய வேண்டும்" என்கிறார். கதை நிகழும் காலம், கதை நிகழ்ந்த காலம் என காலம் இரு வகைப்படுகையதின் தொடக்கம் முதல் முடிவு வரை உள்ள காலம் கதை நிகழும் காலமாகும். அது ஒரு சில நிமிடங்களாகவும் இருக்கலாம் அல்லது பல வருடங்களாகவும் இருக்கலாம். முன்பு எப்பொழுதோ நடந்த நிகழ்வுகள் கதையிலுள்ள கதாபாத்திரங்கள் மூலம் நற்பொழு நினைக்கப்படுமானால் அது கதை நிகழ்ந்த காலமாகும். சிறுகதையில் இடம்பெறும் காலம் கதை நிகழ்ச்சிகளுக்கும் கதாபாத்திரங்களுக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும். கதை நிகழும் காலத்தின் அளவிற்கும் கதையின் படக அளவிற்கும் தொடர்பில்லை. ஒரு சில நிமிடங்களில் கதை நிகழும் காலப்பெருக்காலும் அக்கதை நுட்பத்தும் மேற்கட்ட பண்புகளை உடையதாகக் கூட இருக்கலாம்.

பாலகுமாரனும் காலம் பற்றிய செய்திகளும்

வருத்தமான பாலகுமாரன் அவர்கள் பதினாறுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் உட்பட, கணி நூற்று நாற்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்திருக்கிறார். அவருடைய சிறுகதைகள் சில மனித நேசங்களையும், சில நட்புகளையும், சில வாழ்வுகளையும், சில மரணங்களையும், சில வருடங்களையும் கதை நிகழும் கால அளவாகக் கொண்டுள்ளன.

Scanned with CamScanner

திருவள்ளுவர் கல்லூரி

(தேசியத் தரநிர்ணயத்தில் 'B++' தகுதி பெற்றது)

பாபநாசம், விக்கிரமசிங்கபுரம் – 627 425 திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு

தமிழ்த்துறை - தேசியக் கருத்தரங்கம்

"இலக்கியங்களில் அழகியல் கூறுகள்"

நாள் : 11.10.2019. வெள்ளிக் கிழமை

சான்றிதழ்

முனைவர் வ. மாலிக், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை (சுயநிதிப்பிரிவு) சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி),ராஹ்மத்நகர். அவர்கள் பாபநாசம், திருவள்ளுவர் கல்லூரித் தமிழத்துறை, 2019 ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் 11 ஆம் நாளன்று நடத்திய **"இலக்கியங்களில் அழகியல் கூறுகள்"** என்னும் பொருண்மையிலான தேசியக் கருத்தரங்கில் பங்கேற்றமைக்கு / பங்குபெற்று **நேசத்துணை நாவல் உணர்த்தும் குடும்ப அழகியல்** என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கியமைக்குச் சான்றளிக்கப்படுகிறது.

முனைவர். இரா. இந்துபாலா கருத்தரங்க அமைப்பாளர்	முனைவர். கூ. சிவசங்கர் தமிழ்த்துறைத்தலைவர்	முனைவர். க. கருணாகரன் முதல்வர்

முன்னுரை

"ஒரு [illegible] மலேசிய" (புறம் 183:5)

"[illegible] விருந்து [illegible]" (புறம் 230:13)

"[illegible] பெருக" (பதி 59:7)

[illegible] "ஆடு" என்ற சொல் "ஆடுமகள்" என்ற பொருளையே உணர்த்தும்

[illegible] தொடங்கி இக்காலம் வரை ஆடுமகள் அமைவில் கலைவடிவ [illegible] முக்கியத்துவம் பெற்றுக்கொண்டுள்ளது. இதில் இக்கால இலக்கியமான நாவல் இலக்கியமும் [illegible] ஆடுமகளை விருந்துக்கு நகர்வில்லை.

நிலக்கூறுகளில் "நேசத்துயரம்" நாவல் ஆடுமகத்தில் பெண் எவ்வாறு இருக்க [illegible] என்பதை [illegible] முறையில் பதிந்தும், வருத்தும் கூறியுள்ளது. இதனை ஆராய்வது இக்கட்டுரை நோக்கமாகும்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த பெண்கள் இயல்பாகவே [illegible] நாவி வெற்றியை இலட்சியமாக இருந்து சாதிக்கிறாள் என்பதே "நேசத்துயரம் நாவலின்" அடிப்படை கருத்து.

நேசத்துயரத்தில் வரும் "நளினி" ஒரு நிறுவனமான மலுவழி பட்டதாரிப் பெண். ஆனால் பட்டதாரிகள் அனைவரும் செய்ய முன்வந்தார்கள் ஆனாலும் அவள் பணிக்கு [illegible] முக்கிய 'வடிவேலுவை' நியமனம் செய்கிறாள்.

வடிவேலுவோ அலுவலகப் பதிப்பு நாள். ஆனாலும் 'நளினியும், வடிவேலு' ஆகிய [illegible] அவர்கள் உடல் உழைப்பினால், நேசத்தாலும் பாசத்தாலும் புரிதல்களாலும், அப்பணியிலும் [illegible] கொண்டு கட்டுகிறார்கள்.

இவர்களின் அந்நிய வாழ்வியல் அதிகரிக்கும் வடிவேலுக்கும் [illegible] அதிகம் பிறக்கிறது. நியமனத்திற்கு பின்பு கலைவனின் உதவியோடு படிக்க முயல் [illegible] நளினி இக்கதையில் சிரித்துவிடுகிறாள்.

"வெள்ளைத் தாளில் வரைவோ எழுதிக் கொண்டிருந்த நளினி தலையைத் [illegible] உயரே பார்த்தாள். அவளைக் கருவி நிறையப் புதிதாகவுள்ள திருப்தியுடன் [illegible] பார்த்து பெறுவ பெரிய ஒரு அதிசயமான அனுபவிப்பை செய்து முடித்துவிட்டு [illegible] என்பதில் நிச்சயம் இருந்தாள் (நேசத்துயரம் – 88)

தமிழ்த்துறை

தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)

(ஆத்மார்சாம் கல்லூரி, தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 3.50 புள்ளிகளுடன் 'A' தகுதி பெற்றது)

பாளையங்கோட்டை - 627 002

பொருநைப் பதிவுகளும், பன்முக எழுத்தாளுமைகளும்

தேசியக் கருத்தரங்கம்

நாள் : 19.02.2019

சான்றிதழ்

தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாளில் "பொருநைப் பதிவுகளும் பன்முக எழுத்தாளுமைகளும்" என்னும் பொருளில் நடத்திய தேசியக் கருத்தரங்கில் "இரா. அலிசியா, "பண்முக நோக்கில் பொருநை" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆய்வுக்கட்டுரை பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நவீனத் தமிழாய்வு (MODERN THAMIZH RESEARCH - ISSN 2321 - 984X) இதழில் இடம் பெற்றுள்ளது.

அருட்முனைவர்	பேரா. முனைவர்	பேரா. முனைவர்
வி. பிரிட்டோ சே.ச.	இரா. பிரான்சிஸ் சேவியர்	மி. கவிதா
முதல்வர்	துறைத்தலைவர்	கருத்தரங்கச் செயலர்

பன்முக நோக்கில் பொருநை

முனைவர் இரா. அனுசுயா
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, பாளையங்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

ஓலைகவடிகள் முதற்கொண்டு பண்டைய இலக்கியங்கள் மற்றும் நவீன இலக்கியங்கள் வரை நெல்லை சீமை குறித்த பதிவுகள் பரந்துபட்டு காணப்படுகின்றன. இலக்கியவாதிகள் திறனாய்வாளர்கள், எழுத்தாளர்களின் பார்வையில் நெல்லை பற்றிய தகவல்களை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

பொதிகை மலைச்சிறப்பு

தாம்பிரவன்னி ஆத்துவரத்துச் கவடியில் பொதியமலை குறித்த பாடல் கீழ்கண்டவாறு

"ஏலச்செடி படருங் கோலப் பொதியமலை
குரவர் திரியு மலை நறவு சொரியுமலை
கோங்கு வளருமலை நாங்கு கிளருமலை
பூதலம் புரக்குமலை மாதவம் பரக்குமலை
உறுதி படைத்தமலை யிறுதிதுடைக்குமலை
ஒளிகள் பெருத்தமலை பளியரிருக்கு மலை"

வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் மலையின் வளமையும் செழுமையும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஏலச்செடிகள் நிறைந்த அழகான மலை, குறவர்கள் வாழ்கின்ற மலை, தேன் சொரியுமலை, கோங்கு மரங்கள், நாங்குமரங்கள் வளரும் மலை, உலகைக்காக்கும்மலை, தவத்தால் சிறந்த மலை, உறுதியான மலை, அழிவை நீக்கும் மலை, ஒளிபொருந்தியமலை, பளியர் எனப்படும் மலைவாழ் மக்கள் வாழும்மலை என்று அங்கு வாழும் மக்களைப் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. மேலும்

"அறிவு செறியுமலை நெறிகளறியுமலை
அருவிப்பொதியமலை அகத்தியர் வாழுமலை
ஆதி நாதரும் ஆனந்த சூரியும்
அளகைக் கோனுட னைங்கரமூர்த்தியும்
வேதமாலும் பிரம்மாவும் நத்தியும்
மிக்க கின்னரர் துரும்புரு நாரதரும்"

எனவும் கூறப்பட்டுள்ளது.

அறிவை கொடுக்கும் மலை, ஒழுக்கநெறிகளை அறிந்திடும் மலை, அருவிகளையுடைய பொதியமலை, அகத்தியர் வாழும் மலை, சிவபெருமானும் உமையம்மையும், தேவேந்திரனும் விநாயகனும் மற்றும் திருமால், பிரம்மா, திருநந்தி, கின்னரர் வீணையையுடைய நாரதர் ஆகியோரும் அமர்ந்த மலை என்று தேவர்களும் வாழ்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தாமிரபரணி ஆற்று வெள்ளம்

திருநெல்வேலியின் செழிப்பும் அமைப்பும் குறிப்பிட்டுள்ளது.

"வேதியர்கள் வேதநெறி ஓதிய நன்னகரம்
வேலியிட்டப் போலே செஞ்சாலிகத்து
நகரம்
செய்தியறியாத துலுக்கன் சென்று புல்லைக்
கொடுக்க
செவ்விய கல்லியம் புல்லைக் கவ்விய
நன்னகரம்
அந்நகரம் நெல்வேலி நன்னகரம் நன்னில்
வாழ்
அப்பர் திருநெல்லையப்பர் அம்மை
வடிவம்மாள்
கன்னிகை போல் நீராடச் சிந்து
பூந்துறையில்
கட்டிவைத்த மண்டபத்தைத் தொட்டு
வெள்ளம் வருமாம்"

Advisory Editor
Dr. N. Chandra Segaran
Editorial Board
Dr. MAM. Rameez
Dr. R. Jeya Raman
Dr. M. Pandi
Dr. Avanga. Pari
Dr. A. Ra. Sivakumaran
Dr. A. Syed Zakir Hasan
Dr. Kumar
Dr. S. Easwaran
Dr. P. Jeyakrishnan
Dr. G. Veeramani
Dr. K. Narmatha
Dr. S. Balasubramanian
Dr. K. Vasudevan
Dr. F. Selvakumaran
Dr. T. Vishnu Kumaran
Dr. S. Rajendran
Dr. B. Sathiyamoorthy
Dr. Govindaraj
Dr. Kumara Selva
Dr. Senthil Prakash
Dr. R. Kurinchiveenthan
Dr. Sr. Jeusin Francis
Dr. R. Rajalakshmi
Dr. R. Malarvizhi
Mangayarkarasi
Dr. P. Ibrahim
Dr. K. Sirajudeen
Dr. T. Jegathesan
Dr. Pon. Kathiresan
Dr. M.H. Jahanara
Anbu Jaya
Dr. R. Tamilselvan
Mr. K. Saravanan

20 பகுதி-3 Part -3

பன்னாட்டு மாண்பியல் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

சான்றிதழ்

Certificate

This is to certify that Dr. / Mr. / Ms.

மு.சாதிக் அலி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
(உதவிப் பேராசிரியர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

has Published a paper titled

பாவண்ணன் சிறுகதைகளில் உத்தி

Sl.No. 104 140
Pages : 516-519

Published by
RAJA PUBLICATIONS
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

June 2019

Chief Editor
Dr. M. Sadik Batcha
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in

2019-20-4

பாவண்ணன் சிறுகதைகளில் உத்தி

மு.சாதிக் அலி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா
(உதவிப் பேராசிரியர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

சமீப காலத்தில் சிறுகதைகள் புற்றீசல் போல விரைவாகப் பெருகி விட்டாலும் ஒரு சில ஆசிரியர்களின் சிறுகதைகள் மட்டும் கால வெள்ளத்தைக் கடந்து நிற்பதற்குக் காரணம் அவர்கள் தங்கள் படைப்புகளில் பயன்படுத்தும் உத்திகளாகும். பெரும்பாலான சிறுகதைகளின் மையம் ஒன்றாக இருந்தாலும் கதை கூறப்படுகின்ற முறையில் அவை வேறுபடுகின்றன. ஒரு படைப்பில் "ஆசிரியர் தான் உணர்ந்த வினையும் கருத்துகளை வெளிப்படுத்தும் முறையே உத்தி"[1] எனப்படும். ஒரு "படைப்பில் படைப்போனின் தனித்துவ முத்திரையாக அமைவது உத்தி"[2] ஆகும். உத்தி பற்றி திறனாய்வாளர்கள் கூறும் போது "எழுத்தாளனின் படைப்பாற்றலைக் காண்பதற்கு உத்தி துணை செய்கிறது. நுவல் பொருளை உணர்ந்தவும், அது பற்றி கணிக்கவும் உத்தி ஒன்றே ஏதுவாக அமைகிறது"[3] என்கின்றனர்.

உத்தி வகைகள்

படைப்பாளியின் அதீத கற்பனை திறத்தைக் காட்டவும் படைப்பில் தகுந்த, புதிய சொற்களை பயன்படுத்தவும், பிற படைப்புகளிலிருந்து தன்னுடைய படைப்பை கலையாக்கி வேறுபடுத்திக் காட்டவும், படைப்பாளன் கையாளும் அனைத்து முயற்சிகளும் உத்திகளாகும். தமிழ்ச் சிறுகதைகளில் தொடக்கத்திலிருந்து இன்று வரை பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அவ்வுத்திகளை நான்கு வகைக்குள் அடக்கலாம். அவை

1. வடிவத்தில் காணப்படும் உத்திகள்
2. உள்ளடக்கத்தில் காணப்படும் உத்திகள்
3. மரபு சார்ந்த உத்திகள்.
4. நவீன உத்திகள்

என உத்திகளில் பல வகைகள் இருந்தாலும் ஆசிரியர் பாவண்ணனின் சிறுகதைகளில் உள்ளடக்கத்தில் காணப்படும் உத்திகளை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

ஆசிரியர் பாவண்ணன்

எழுத்தாளர் பாவண்ணன் அவர்கள் பதினாறுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் உட்பட கமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்திருந்தாலும் அவருடைய வலை, வெளிச்சம், இரண்டு மரங்கள், வெளியேற்றப்பட்ட குதிரை ஆகிய நான்கு தொகுப்பிலுள்ள சிறுகதைகளை ஆய்வு செய்து அக்கதைகளில் இடம் பெற்றுள்ள உத்திகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உள்ளடக்கத்தில் காணப்படும் உத்திகள்

கதையின் வெற்றிக்காகவும், வாசகர் மனதில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவும், சிறுகதையின் உள்ளடக்கத்தின் ஆசிரியர்கள் சில உத்திகளைக் கையாளுவர் அவை

1. பின்னோக்கு உத்தி
2. தலைப்பில் உத்தி
3. கதைக்குள் கதை
4. உரையாடல் உத்தி

ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

AN INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES

ISSN : 2278-7550

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330

சான்றிதழ்

ஜனவரி - 2019

திரு/திருமதி/செல்வன்/செல்வி.....மு.சாதிக் அலி.....

.....அவர்களால் எழுதப்பட்ட

.....பாரவண்ணன் சிறுகதைகளில் அறச் சிந்தனைகள்.....

.....

என்னும் ஆய்வு கட்டுரை இவ்விதழில் பிரசுரமாகி உள்ளது.

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில், ஈரோடு - 11.

பேச : 0424-2251545, 94422 51549, 97919 51549, 63817 01339

www.pallavipathippakam.in Email:pallavipublications@gmail.com

Scanned with CamScanner

"முன்னுரை [illegible]

முன்னுரை

[illegible] "அறம் என்பது வையகமும் வானகமும் [illegible] மனத்திலும் உள்ள பொருள்சடமும், இறைச்சடமும்" என்கிறார் [illegible] "அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என்கிறது தண்டியலங்காரம். [illegible] "மனிதன் தனக்கென வகுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே அறமாகும்" என்கிறார் நாகை தண்டபாணி பிள்ளை. தன் மனிதனையும் மனித சமுதாயத்தையும் நெறிப்படுத்தும் கருவியே அறம் என புலவர்கள் கருதியதால் நீதி இலக்கியங்கள் தோன்றின. மண்ணுலக வாழ்வு, விண்ணுலக வாழ்வும் சிறக்க அறமே இன்றியமையாதது என்றனை புலவர்களுக்கு இருந்தது. எனவே தம் படைப்புகளில் அறத்தை வலியுறுத்தி, மக்கள் அறவழியில் கடைப்பிடிக்க வேண்டும் என முனைந்தனர். அவ்வாறு படைக்கப்பட்ட இலக்கியங்களில் இக்காலத்தமிழ் இலக்கியமான சிறுகதையும் ஒன்று. பாவண்ணனின் சிறுகதைகளில் காணப்படும் அறச்சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

பாவண்ணன்

எழுத்தாளர் பாவண்ணன் அவர்கள் பதினாறுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள், உட்பட கால் நூறுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்திருந்தாலும் அவருடைய வெளியேற்றப்பட்ட குதிரை, பொம்மைக்காரி ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளை ஆய்வு செய்து அக்கதைகளில் இடம் பெற்றிருக்கும் அறச்சிந்தனைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாவண்ணனின் வெளியேற்றப்பட்ட குதிரை

பாவண்ணனின் வெளியேற்றப்பட்ட குதிரை" என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இச்சிறுகதையில் கலைதாரியாய் ஆதரவற்றோர் இல்லத்துடன் ஆறு ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டு அங்குள்ள குழந்தைகளுக்கு சிற்றுண்டி, பழங்களை வாங்கிக் கொடுத்து தன்னுடையத் திருமண நாளை கொண்டாடி வரும் ரவி அக்குழந்தைகளின் ஆசையை நிறைவேற்றுவதற்காக அவர்களை மகாபலிபுரத்திற்கு சுற்றுலா அழைத்துச் செல்கிறார்.

"ஆதரவற்றோர் இல்லத்துடன் தொடர்பு வைத்துக்
கொண்டத் தொடங்கி ஆறு ஆண்டுகள் கழிந்து விட்டன" (ப-42).
"வாசலில் இருந்த சேவகன் என் கையிலிருந்த
இனிப்புப் பெட்டியையும், சிற்றாவிடமிருந்து
முறுக்கு அடுக்கிய வாளியையும் வாங்கிக்
கொண்டான். சிற்றுண்டிப் பெட்டிகளை மேலும்
இருவர் ஓடிவந்து ஆட்டோவிலிருந்து
எடுத்துக் கொண்டார்கள்" (ப-43)
"பத்து நிமிடங்களில் வண்டி கடற்கரையை
அடைந்தது. ஒரு பெரிய பாய்மு சிறகுகளுடன்
படபடத்தி தெளிந்து வருவதைப் போல
தொலைவில் உயர்ந்து குதித்தாடிய படி
வந்து கொண்டிருந்தன அலைகள்" (ப-55)

ஒன்று மரம்

உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்த்திருக்கும் தன் மகளை காப்பாற்ற முன்று பூண்ட ரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதால் கையில் காசில்லாத நிலையில் அருகிலுள்ள இளைஞர்களின் உதவியை நாடுகிறாள் ஏழுமுத்தாய். அவர்களும் உதவுவதாகச் சொல்லி ரத்தம்

தமிழ்த்துறை

தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)

(ஆற்றல்சார் கல்லூரி, தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 3.50 புள்ளிகளுடன் 'A' தரம் பெற்றது)

பாளையங்கோட்டை - 627 002

பொருநைப் பதிவுகளும், பன்முக எழுத்தாளுமைகளும்

தேசியக் கருத்தரங்கம்

நாள் : 19.02.2019

சான்றிதழ்

தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாளில் "பொருநைப் பதிவுகளும் பன்முக எழுத்தாளுமைகளும்" என்னும் பொருளில் நடத்திய தேசியக் கருத்தரங்கில் .....முனைவர்.....அ.....மாணிக்க, உதவிப்.....பேராசிரியர்.....

....."புதுமைப்பித்தன்.....என்னோடு.....மானுடன்....."

எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆய்வுக்கட்டுரை பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நவீனத் தமிழாய்வு (MODERN THAMIZH RESEARCH - ISSN 2321 - 984X) இதழில் இடம் பெற்றுள்ளது.

அருள் முனைவர்
வி.பிரிட்டோ சே.ச.,
முதல்வர்

பேரா. முனைவர்
இரா.பிரான்சிஸ் சேவியர்
துறைத்தலைவர்

பேரா. முனைவர்
மி.கவிதா
கருத்தரங்கச் செயலர்

Scanned by TapScanner

புதுமைப்பித்தன் என்றொரு மாலுடன்

பேரா. வ. மாலிக்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ சைதன்யா கல்லூரி,
ஜமீன் தகர், திருநெல்வேலி-627 011, தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ச் சிறுகதை உலகில் முடிசூடா மன்னனாக விளங்கியவர் புதுமைப்பித்தன். தமிழ்ச் சிறுகதைகளை உலகத்தரத்திற்கு உயர்த்திய மணிக்கொடி பரம்பரை எழுத்தாளர்களில் முக்கியமானவர்.

புதுமைப்பித்தன் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி பிறந்தார். 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதி மறைந்தார். அவர் வாழ்ந்த காலம் சுமார் 43 ஆண்டுகள் ஆகும்.

பல பரிசோதனை உத்திகளைத் தன்னுடைய சிறுகதைகளில் உலவ விட்டவர் மாறுபட்ட கதாபாத்திரங்களைப் படைத்து வெற்றி பெற்றவர்.

வாழ்வை உள்ளபடி நேர் நின்று நோக்க வேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டவர். இந்த இலட்சியத்தின் விளைவாகவே பொன்னகரம், கடவுளும் கந்தசாமி பிள்ளையும், தெருவிளக்கு, ஒரு நாள் கழிந்தது, நினைவுப் பாதை ஆகிய சிறுகதைகளில் காணலாம். வறுமையின் கோரப்பிடியில் சிக்கி, கற்பை விற்கும் தொழிலாளிப் பெண்ணான அம்மாளு கணவனுக்குக் கஞ்சி வார்க்க தன் கற்பை முக்கால் ரூபாய்க்கு விற்கிறாள்.

"சந்தின் பக்கத்தில் ஒருவன் அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாக கண் வைத்திருந்தவன்" இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள் ஆம் புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்.(ப.3)புசி

புதுமைப்பித்தன் சமூகத்தில் ஜாதியின் கொடுமைக் கண்டு வெகுண்டெழுந்தார் அப்போது அவர் எழுதிய "புதிய நந்தன்" சிறுகதை தமிழகம் முழுவதும் பேசப்பட்ட ஒரு கதையாக இருந்தது

"வேகமாக ஓடிவருகின்றவர்
வெளிச்சம், வெளிச்சம்
மூவரும் சேரும் சமயம் இடித்து விடலாம்"
ஐயோ!
ஹதம் ரத்தக் களரி

மூவரின் ரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன. ஒன்றாய்த்தான் இருக்கின்றன. (ப.11) புசி. என்று கூறுவதன் மூலம் சமூகத்தில் ஜாதி புரையோடி கிடந்ததையும், இறந்த பின்னாவது காதல் வயப்பட்டவர்கள் சேருவார்களா! என்ற வினாவுடனே கதையை நிறைவு செய்ததுடன் சமுதாயத்தின் பலியாகும் என்ற துக்கச் செய்தியை சொல்லி விட்டு இது பத்திரிகையில் செய்தியாகும் என்ற சோகத்துடன் கதையை முடிக்கிறார். சமூக அவலநிலையை ஜாதியுடன் தைரியமாக எடுத்துக் கூறும் போக்கு புதுமைப்பித்தன் கதைகளில் வெளிப்படையாக உள்ளது.

"தெருவிளக்கு என்னும் சிறுகதையில் மனித வாழ்க்கையை தெருவிளக்கோடு ஒப்பிட்டு வாழ்க்கை என்பது நியைகீமை மனிதனுக்கு மட்டும் அல்ல இயந்திரமான விளக்கிற்கும் தான் என்பது புதுமையாகும்."

"இளமை, மூப்பு, சாக்காடு என்பவை மனிதருக்கு மட்டும் உரிமையில்லை." (ப.12) புசி. என்கிறார்.

அந்தத் தெருவிளக்கு ரோட்டோரம் இருக்கும் பிள்ளைக்காரனின் வீடுமாகும் தெருவிளக்கு அவன் தோழனாம் அந்த விளக்கு பழுதடைந்து உடைந்து விடவே அதனை எடுத்து விடுகிறார்கள். அது

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மற்றும்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தொல்லியல் சான்றும் தமிழர் பண்பாடும் Archaeological Evidence and Tamil Culture

சான்றிதழ்

முனைவர்/திரு/திருமதி/செல்வி. ஞா. அந்தோணி சிரேஜ்

அவர்கள் தொல்லியல் சான்றும் தமிழர் பண்பாடும் என்னும் பொருண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் 27.4.2019 அன்று இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்று _____ என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கி சிறப்பித்தார் என்று சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் கோ. விசயராகவன் (இயக்குநர்) கருத்தரங்கத் தலைவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை.	முனைவர். நா. சுலோசனா கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை.	திருமதி.த.மகேஸ்வரி பதிப்பாசிரியர் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்.

International Journal of Tamil Language and Literature

E-ISSN: 2581-7140
Special Issue : Vol. 1, April-2019

Website : www.ijtlls.com

நாணயங்களும் பாதுகாக்கும் வழிமுறைகளும்
Measurements to Preserve Coins

முனைவர்.ஞா.அந்தோனி சுரேஷ், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

Abstract

The study of the paper deals with the coins and its preservation methods. In Tamil Monarchal rule, the kings issued various types of coins. The triumvirate, Chere, Chola and The Pandian kings coined coins made up of gold, copper and other metals. They are sparsely found out by the archaeologists and preserved in many methods. Therefore, the study traces the art of numismatics and the preserving measures.

Keywords: Measurements, Preserve Coins, Tamil Society, Coins, Numismatics

முன்னுரை

பண்டை காலத்தில் நம் இந்திய மக்கள் பண்டமாற்று முறையிலேயே பொருட்களைப் பரிமாறிக் கொண்டனர். ஏறத்தாழ கி.மு.ஆறாம் நூற்றாண்டில்தான் நம் இந்திய நாட்டில் நாணயங்கள் தோன்றியதாக அறிஞர்கள் கருதுகின்றனர். சங்ககால சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் நாணயங்களின் பயன்பாடுப் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிது.

ஹரப்பா நாகரிகம்

நாணயங்கள் தோன்றுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஹரப்பா நாகரிகம் நம் நாட்டில் வேருன்றிவிட்டது. சிந்து நதிப்பள்ளத்தாக்கை மையமாகக் கொண்ட இந்த நாகரிகம் நாட்டின் பெரும் நிலப்பரப்பில் பரவி, இந்திய வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டது. நகரங்களில் மக்கள் மிகுதியாகக் குடியேறினர். அந்தக் கால கட்டத்தில் ஹரப்பா மக்களுக்கும், எகிப்து உட்பட்ட மேற்காசிய மக்களுக்கும் வணிகத் தொடர்பு இருந்து வந்தது. நாகரிக முதிர்ச்சி அடைந்த அவர்கள் தங்கள் பொருட்களின் உரிமையைக் குறிக்க முத்திரைகளைப் பொறித்தனர். நிறுத்தல், முகத்தல் உள்ளிட்ட அளவுகளைப் பயன்படுத்தினர். இந்த அளவை முறைகள் உள்நாட்டு வணிகத்திலும் வெளிநாட்டு வணிகத்திலும், பெரிதும் மேற்கொள்ளப்பட்டன. மிகச் சிறந்த வணிக வளர்ச்சி பெற்றிருந்தாலும் பண்டைய இந்தியர்கள் நாணயத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேதான் நடந்ததாகக் கருதப்படுகின்றது. உலோகத்தையும் ஒரு பண்டமாகவே இவர்கள் கருதினர். குறிப்பிட்ட எடையுள்ள ஓர் உலோகத்திற்கு நாணயத்தின் மதிப்பு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. 'ஹரப்பா மக்கள் தானியங்களையே தங்களின் சிறந்த செல்வமாகக் கருதினர்' என்று மார்டிமர் வீலர் கருததுத் தெரிவித்துள்ளார். ஹரப்பா மக்களை அடுத்து நாகரிகம் அடைந்த ஆரியர் தொடக்க காலத்தில் கால்நடை மேய்ப்பவர்களாகவும் பின்னர் உழவர்களாகவும் மாறினர். அவர்கள் தொடக்கத்தில் கால்நடைச் செல்வங்களையும் தானியங்களையும் பண்டமாற்றுப் பொருட்களாகப் பயன்படுத்தினர் என்று அறிய இடமுண்டு. பண்டைக் காலத்தில் அரிசி சிறந்த பண்டமாற்றுப் பொருளாகத் திகழ்ந்தது.

2019-20-8

Scanned by TapScanner

உலக பண்பாட்டில் தமிழர் அடையாளம்

முனைவர் வ.மாலிக்

முன்னுரை

தொல்பழங்காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலையே தொல்லியல் அல்லது தொல்பொருளியல் எனகிறோம். தொன்மையான காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, தொழில்கள், வாணிகம், வேளாண்மை, அரசியல், நுண்கலைகள் முதலியவற்றைப் பற்றி அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களான கல்வெட்டுகள், பழங் கட்டடங்கள், காசுகள், செப்பேடுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தறிதலே முதன்மையான நோக்கம்.

இந்த நோக்கததை அடிப்படையாகக் கொண்டு 'தமிழர் பண்பாடு உலகளவில் பரவிக் கிடக்கிறது என்பதைப் பதிவு செய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். உலக நாகரிகத்தில் காணப்படும் திராவிடப் பண்பாட்டுக் கூறுகள் முதன்மையானவை, முக்கியமானவை. உலகப் பண்பாட்டின் அடிப்படையில் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் திராவிடப் பண்பாட்டின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது என்றனர் வரலாற்றறிஞர். திராவிட நாகரிகத்தின் செல்வாக்கு, சமயம், மொழி, கலைகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி நிற்கின்றது.

திராவிடர்களின் அடையாளம்

திராவிடர் உலகம் முழுவதும் வாழ்ந்துள்ளனர். மொகஞ்சதாரோ, ஹரப்பா, ஆகிய இடங்களில் மிகவுயர்ந்த நாகரிகத்தைப் படைத்திருந்தனர். தமிழ்ப் பண்பாடு பல கடல் கடந்த நாடுகளில் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் தமிழரே! தமிழ் வணிகர் குடியேறிய இடமெல்லாம் இந்தியப் பண்பாடு பரவியது. பருமா, சயாம், அந்தமான், மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பா முதலிய நாடுகளிலும் தமிழ்மொழி பரவியது. திராவிட முறையில் கட்டப்பட்ட பல கோவில்களை அங்கே காணலாம். ஏரிகளையும், குளங்களையும் வெட்டி அவற்றைத் தமிழ் வணிகர் பேணினர் என்பதைப் பல கல்வெட்டுகளால் அறிகிறோம்.

வானநூல் அறிவு

சிறப்புமிக்க பாலி மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் கண்ட "கச்சாயனர் காஞ்சி" நகரத்தில் பிறந்தவராம். உலகத்தில் பல இன மக்களிடையே வழங்கும் வானியல் கொள்கைகளில் தமிழருடையதே துல்லியமானது என்கிறார் சிலேட்டர்.

தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கொண்டு ஓரளவு அறியலாம். தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது தொல்காப்பியம்.

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, (அரசுதவி பெறாப்பிரிவு), சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி), ரஹ்மத்நகர், திருநெல்வேலி

2019-20-9

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது
சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2015 பெற்றது.)

ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

பல்கலைக்கழக நீதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில்
அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ்
இணைந்து நடத்தும்

தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு

பன்னாட்டுக் கருத்தரங்கப் பாராட்டுச் சான்றிதழ்

கல்லூரித் தமிழ்த்துறையும் ஜெர்மன் தமிழ் மரபு அறக்கட்டளையும் இணைந்து **04.10.2019** அன்று நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில்

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

இலக்கியங்கள் காட்டும் நடுகல் முறை

எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவருடைய ஆய்வுக் கட்டுரை சதக்கத் ஆய்விதழில் (ISSN:2347-7644 INDEXED IN GOOGLE SCHOLAR - VOL-VII - I) இடம்பெற்றுள்ளது.

முனைவர் ச.மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் மு.முஹம்மது சாதிக்
முதல்வர்

முனைவர் க. சுபாஷிணி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்

முன்னுரை

தமிழ்மொழி மற்றும் தமிழ் இனத்தின் வரலாறு என்பது காலத்தால் அழிக்க முடியாத பொக்கிஷங்கள் ஆகும். மனிதனின் தோற்றம் முதல் பண்பாட்டின் படிநிலைகளின் வரலாற்றை அறிய முற்படும் போது சான்றுகள் மிகமுக்கியமாகக் கருதப்படுகிறது. அத்தகைய சான்றுகளைத் தேடும் முயற்சிகளின் வாயிலாகப் பழங்கால மக்களின் வாழ்வியல் முறைகளை அறியமுடிகின்றது. ஆதாரங்களோடு விளக்கப்படும் மனிதனின் வரலாறு காலத்தால் அழிக்க முடியாத சான்றுகளாக அமைகின்றது.

தொல்காப்பியர் கூறும் நடுகற்கள்

தமிழ் இலக்கண நூல்களுள் தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் இறந்தவர் நினைவாகக் கல் எடுத்துச் சிறப்புச் செய்தல் பற்றிய செய்தியைக் கூறுகின்றது.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடுபுணர... (புறத்திணையில் 5:19-21)

தொல்காப்பியர் ஆறு நிலைகளை வீரக்கற்களுக்குரியதாகக் கூறியுள்ளார்.

1. சிற்பம் செதுக்கி நடுதற்குரிய பொருத்தமான கல்லைத் தேடிச் சென்று காணுதல் காட்சி எனப்படும்.
2. மலையிலிருந்து வீரக்கல் செய்வதற்குரிய கல்லை வெட்டிக் கொள்ளுதல் கால்கோள் எனப்படும்.
3. வீரனுக்கு எடுத்தகல்லை நீராட்டித் தூய்மைப்படுத்துதல் நீர்ப்படை எனப்படும்.
4. அக்கல்லை நடுவது நடுதல் எனப்படும்.
5. நடப்பட்ட கல்லிற்குப் பெருஞ்சிறப்புகளைப் படைத்தல் பெரும்படை எனப்படும்.
6. நடப்பட்ட நடுகல்லினைத் தொழுது வாழ்த்துதல் வாழ்த்தல் எனப்படும்.

வீரத்தின் அடையாளமாக நடப்படும் நடுகற்களை எழுப்புவது முதல் அதனை வாழ்த்தி வழிபடுவது வரையிலான நிகழ்ச்சிகளைத் தொல்காப்பியத்தின் மூலம் அறியமுடிகின்றது.

நடுகல் அமைவிடம்

பெரும்பாலும் நடுகற்கள் ஊர்களின் புறத்தே காணப்படுகின்றன. ஊர்களின் நடுவில் நடுகற்கள் காணப்படவில்லை. ஒன்று இரண்டு இடங்களில் மட்டும் ஊர்களின் உட்புறத்தில் காணப்படுவது உண்டு. ஒரே போரில் இறந்த பல போர் வீரர்களுக்கும் நடுகற்கள் ஒரே இடத்தில் காணப்படுவதும் உண்டு.

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி), ரஹ்மத் நகர், திருநெல்வேலி.

2019-10-10

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது.
சர்வதேச தரச் சான்றிதழ் ISO 9001:2015 பெற்றது.)

ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

பல்கலைக்கழக நீதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில்
அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ்
இணைந்து நடத்தும்

தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு

பன்னாட்டுக் கருத்தரங்கப் பாராட்டுச் சான்றிதழ்

கல்லூரித் தமிழ்த்துறையும் ஜெர்மன் தமிழ் மரபு அறக்கட்டளையும் இணைந்து
04.10.2019 அன்று நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில்

முனைவர் மு.ரா. மஜிதா பர்வின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

சங்ககால நடுகல் கோவிலாகவும் தெய்வமாகவும் உருவான வரலாறு

எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவருடைய ஆய்வுக் கட்டுரை சதக்கத் ஆய்விதழில் (ISSN:2347-7644 INDEXED IN GOOGLE SCHOLAR - VOL-VII - I) இடம்பெற்றுள்ளது.

முனைவர் சி.மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் மு.முஹம்மது சாதிக்
முதல்வர்

முனைவர் க. சுபர்ஷிணி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது;
சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது)

பல்கலைக்கழக நீதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ் மற்றும் ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

இணைந்து நடத்தும்

தொல்தமிழ்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்

VOLUME - VII | சதக்கத் ஆய்விதழ் சிறப்புப் பதிப்பு | அக்டோபர் 2019

தமிழ்த்துறை வெளியீடு

04.10.2019

SADAKATH – A RESEARCH BULLETIN ISSN NO. : 2347-7644
INDEXED IN GOOGLE SCHOLAR

சங்ககால நடுகல் கோவிலாகவும் தெய்வமாகவும் உருவான வரலாறு

முனைவர் மு.ரா.மஜிதா பர்வின்

முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் நாகரிகப் பண்பாட்டு அடித்தளமாய் விளங்குகின்றன. அன்பும் ஆண்மையும் பண்பும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழரின் நல்லற வாழ்க்கையையும் இயற்கையோடு கலந்து மலர்ந்த வாழ்வியல் நெறிகளையும் எல்லா இலக்கியங்களிலும் காணலாம். தமிழரின் கலை, கலாச்சாரம், பண்பாடு, அவர் தம் நீண்ட வரலாறு யாவையும் தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. சங்ககால நடுகல், கோயில் தெய்வம், பறை ஆகியவை இன்று இலக்கியங்களில் பேசப்படுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியம்

தமிழில் தோன்றிய மூத்த நூல்களுள் ஒன்றானத் தொல்காப்பியம் என்னும் நூலில் பொருளதிகாரப் புறத்திணையியலில் நடுகல், கோயில், தெய்வம், பறை ஆகியவை பற்றிக் கூறப்பட்ட ஒரு சூத்திரத்தைத் தொல்காப்பியர் அமைத்துக் கூறியுள்ளார். வாட்போரில் எதிர்த்து நின்ற பகைவனை எதிர்த்து வெற்றிவாகை சூடிய அரசிளங்குமரனை அந்நாட்டு மக்கள் பாராட்டிப் பறை முழங்கி அவனுக்கு அரசைக் கொடுத்துக் கொண்டாடினர். போர்க்களத்தில் மரணம் எய்திய போர்வீரர்களின் நினைவாக நடுகல் நிறுத்தற் பொருட்டுச் சிறந்த கல்லைத் தேடி, அதை எடுத்து வந்து, நீரினால் கழுவிச் சுத்தம் செய்து, அக் கல்லினை ஓரிடத்தில் நட்டு, அதைக் கோவிலாக எழுப்பி, அதில் அவர்களுக்கான அடையாளங்களைத் தீட்டி, அக் கல்லிற்குப் பெருஞ் சீரும் சிறப்பும் செய்து, பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாகப் போற்றி வணங்கி வாழ்த்தி வந்துள்ளனர்.

> "வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
> நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
> காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
> சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
> இருமூன்று மரபிற் கல்லொடு புணர (பொருள் 63-17-21)

எனப் பழந்தமிழ்ச் சான்றோர்கள் தம் வாழ்வியலைக் குறிஞ்சித் திணை, முல்லைத்திணை, பாலைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை என ஐந்திணைகளாக வகுத்து, ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியே அவற்றின்கண் உள்ளனவான பதினான்கு (14) கருப்பொருளான தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் ஆகியனவும் வகுத்து, இன்புற்று வாழ்ந்து காட்டினர். இப்பதினான்கு கருப்பொருள்களில் தெய்வம்,

---

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி.

தமிழ்த்துறை

தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)

(ஆற்றல்சார் கல்லூரி, தேசியத் நாக்கட்டுப்பாட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 3.50 புள்ளிகளுடன் 'A' தகுதி பெற்றது)

பாளையங்கோட்டை - 627 002

பொருநைப் பதிவுகளும், பன்முக எழுத்தாளுமைகளும்

தேசியக் கருத்தரங்கம்

நாள் : 19.02.2019

சான்றிதழ்

தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாளில் "பொருநைப் பதிவுகளும் பன்முக எழுத்தாளுமைகளும்" என்னும் பொருளில் நடத்திய தேசியக் கருத்தரங்கில் "கா. அரங்கநாதனின் சிறுகதை, "பாரதியார் பாடல்களில் பெண்ணியம் சிந்தனைகள்" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆய்வுக்கட்டுரை பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நவீனத் தமிழாய்வு (MODERN THAMIZH RESEARCH - ISSN 2321 - 984X) இதழில் இடம் பெற்றுள்ளது.

அருள் முனைவர்	பேரா. முனைவர்	பேரா. முனைவர்
வி.பிரிட்டோ சே.ச.,	இரா.பிரான்சிஸ் சேவியர்	மி.கவிதா
முதல்வர்	துறைத்தலைவர்	கருத்தரங்கச் செயலர்

2019-20-11

பாரதியார் பாடல்களில் பெண்ணியச் சிந்தனைகள்

பேரா. ஞா. அந்தோணி சுரேஷ்
உதவிப்பேராசிரியர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

தன்னைச் சுற்றி எந்த வட்டத்தையும் வரைந்து கொள்ளாமல் எல்லையற்ற பிரபஞ்ச வெளியில் நின்றபடி தன் கவிதைச் சிறகுகளை அசைத்த கானக்குயில் பாரதியார். சமூகத்தின் மீது அதிகமான ஈடுபாடு கொண்டவன் பாரதி பன்முகத் தன்மை கொண்ட தன்னிகரில்லா ஒரு ஒப்பற்ற பாவலன் பாரதி என்றால் அது மிகையல்ல. தமிழின் சுவாசப் பையில் புதிய காற்றைப் புகுத்திய புரட்சியாளன் அவன். ஞானத்தேடலிலும் அதிக விருப்பம் உடைய பாரதி பெண் விடுதலை குறித்து பல்வேறு புரட்சிக் கருத்துக்களை கூறியுள்ளார். பெண் விடுதலை அடையாமல் இந்த நாடு விடுதலை அடையமுடியாது என்பதில் அதிகமான நம்பிக்கை உள்ளவர் பாரதி. அவர் கொண்ட அந்த நம்பிக்கையில் தான் பெண்கள் இன்று ஓரளவேனும் சுதந்திரம் பெற்றிருப்பதாக உணர முடிகிறது. பெண்ணியச் சிந்தனைகள் குறித்து பாரதியார் எவ்வாறு குறிப்பிடுகிறார் என்று இக்கட்டுரை ஆராய்கிறது.

பெண்ணியம்

Feminism எனும் ஆங்கிலச்சொல் Femina எனும் இலத்தின் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண்ணிலை ஏற்பு ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது. பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கலையும் புரிந்து கொண்டு அவற்றைக் கலைய முற்படும் இயக்கமாகும். அரசியல், பண்பாடு, பொருளாதாரம், ஆன்மீகம் ஆகியவற்றில் மாற்றத்தை உருவாக்கிட முடியும். 'சார்லட் பன்ச்' என்பவர் பெண்ணியம் என்பதும் பெண்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தருவது மட்டுமல்ல. சமுதாயத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்று எடுத்துரைக்கிறார்.

பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்று தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். (பிரேமா இரா பெண்ணியம் அணுகுமுறைகள், ப-34) என்று குறிப்பிடுகிறார்.

பெண்களுக்கான உரிமை என்பது கல்வியறிவுடைய பெண்கள் கல்வியறிவற்றப் பெண்கள் என்று இல்லாமல் அனைத்துப் பெண்களுக்கும் உரியதாம். இதனை பார்பராஸ்மித் "எல்லா தரப்புப் பெண்களுக்கும் உரிமை பெற்றுத் தருவதே பெண்ணியம் (பிரேமா-இரா. பெண்ணியம் அணுகுமுறைகள் பக். 13-14) என்கிறார்.

ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்தக்கூடிய தத்துவமே பெண்ணியம் ஆகும் என்கிறார். பாரதி அந்த வகையில் பெண்கள் பெறும் இடத்தையும் அவர்கள் சமுதாயத்தில் அனுபவிக்கும் கொடுமைகளையும் அதற்கான தீர்வுகளையும் பாரதியின் கவிதை விளக்குகிறது.

பெண்மை போற்றும் பாரதி

"வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாடலா
மானஞ்சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்"

என்று தாயையும் தாரத்தையும் உயர்த்தி பாடிய பாரதி, குழந்தையையும் போற்றும் விதமாக பாப்பா பாட்டினையும் இயற்றியுள்ளார். பெண்மை வாழ்க, பெண்மை வெல்க என்று ஆவந்த கூத்தாயவர். பெண் விடுதலைக்காக கும்மி வடிவில் குரல் கொடுத்தவர் பாரதியார். பாஞ்சாலி

2019 - 20 - 12

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2015 பெற்றது.)

ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ் இணைந்து நடத்தும்

தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு

பன்னாட்டுக் கருத்தரங்கப் பாராட்டுச் சான்றிதழ்

கல்லூரித் தமிழ்த்துறையும் ஜெர்மன் தமிழ் மரபு அறக்கட்டளையும் இணைந்து **04.10.2019** அன்று நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில்

முனைவர் அ.சே. சேக் சிந்தா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

தொல்லியல் பதிவுகள்

எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவருடைய ஆய்வுக் கட்டுரை சதக்கத் ஆய்விதழில் (ISSN:2347-7644 INDEXED IN GOOGLE SCHOLAR - VOL-VII - I) இடம்பெற்றுள்ளது.

முனைவர் ச.மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் மு.முஹம்மது சாதிக்
முதல்வர்

முனைவர் க. சுபாஷினி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை









1

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா

கணியன் பூங்குன்றனார்

ISSN:2347-7644 INDEXED IN GOOGLE SCHOLAR - VOL-VII - I

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது)

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ் மற்றும் ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை இணைந்து நடத்தும்

தொல்தமிழ்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்

VOLUME - VII | சதக்கத் ஆய்விதழ் சிறப்புப் பதிப்பு | அக்டோபர் 2019

தமிழ்த்துறை வெளியீடு

04.10.2019

SADAKATH – A REBEARCH BULLETIN ISSN NO. : 2347-7644
INDEXED IN GOOGLE SCHOLAR

தொல்லியல் பதிவுகள்

[illegible]
[illegible]

[illegible] [illegible] [illegible] [

ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)

UGC

முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி மற்றும்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் இணைந்து
பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்
- பன்னாட்டுக் கருத்தரங்கம் -

2019-20-13

வளநடைச் சான்றிதழ்

திரு / திருமதி / செல்வி முனைவர். மு.ரா. மஜிதா பர்வீன்
உதவிப் பேராசிரியர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி அவர்கள்
- தமிழரின் தொன்மை அதனும் தமிழ்ப் புத்தாண்டும்
என்னும் தலைப்பில்
கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் க. சீராஜ் ஹீன்
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
& செயலாளர்

முனைவர் அ. அப்துல் காதிர்
தமிழ்த்துறைத்தலைவர் மற்றும்
கல்லூரி முதல்வர்

முனைவர் S. இம்மயாயில் முனகதீன்
முதல்வர்

றப்பிதழ்
pecial Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
நெசியத் நா மறுமதிப்பீடு முன்றாம் கற்றில் 'A' தரச்சான்று பெற்றது
திருச்சிராப்பள்ளி-620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

பன்முகத் தளத்தில் தமிழியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019

சிறப்பிதழ் ஆசிரியர்
Special Issue Editor

முனைவர் க. சிராஜுதீன்
உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி -620 020.

Published by
RAJA PUBLICATIONS
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

6 பகுதி-7
சிறப்பிதழ்
Special Issue

ief Editor
. M. Sadik Batcha

dvisory Editor
r. N. Chandrasegaran

ditorial Board
r. S. Kumaran
r. S. Rajaram
r. Aranga. Pari
r. G. Rajagopal
r. PM. Jamahir
r. S. Chitra
r. P. Velmurugan
r.A. Ekambaram
r. E.R. Ravichandran
Dr. K. Thilagavathi
Dr. G. Sheik Meeran
Dr. R. Jagadheesan
Dr. P. Selvakumar
r. T. Jegathesan
r. R. Vijayarani
r. J. Chandrakala
r. T.K. Jasmin Sudha
Dr. Sinnathamby Santhirasegaram
Dr. S. Ramesh
r. Manivannan Murugesan
r. A. Rameez
r. G. Mariappan
Dr. K. Manickaraj

தமிழரின் தொடர் ஆண்டும் தமிழ்ப்புத்தாண்டும்

முனைவர் மு.ரா.மஜிதா பர்வின்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி,
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன்தோன்றிய மூத்த குடி" என்று தமிழ்க் குடியின் பெருமையினைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் பாராட்டியுள்ளார். இக்கூற்று தமிழனத்தின் நீண்ட காலத் தொன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. இதற்கமைய சில அபூர்வ சிந்தனையாளர்கள், தத்துவஞானிகள், கல்விமான்கள், சித்தர்கள், யோகிகள், அறிவுமேதைகள் போன்றோர் தம் இனமக்கள் சீர்பெற்று வாழ, அரும் பெரும் சாதனைகள் புரிந்து தமக்கென வாழாப் பிறர்க்கென வாழ்வர். இவர்களை நினைவில் நிறுத்தி அவர்களின் காலத்தை மையப்படுத்தி அவர்கள் பெயரில் தொடர் ஆண்டுகள் அமைத்து வருவது ஒரு சில இனத்தின் வழக்காகும். இத் தொடர் ஆண்டுமுறை ஓர் இனத்தின் தொன்மையை எடுத்துக்காட்ட ஏதுவாக அமைகின்றது.

உலகில் சமயங்கள் பல உள்ளன. அவற்றுள் கிறிஸ்தவ, புத்த, இஸ்லாமிய சமயங்களுக்கு இத்தகைய தொடர் ஆண்டுகள் உள்ளன. இந்துமதம் கலியுக வருடத்தை தன் தொடராண்டாக வகுத்துள்ளது. கேரள நாட்டுப் பேரரசன் ஒருவனின் புகழை மையப்படுத்தி 'கொல்லம்' என்னும் தொடர் ஆண்டும் உள்ளது. இந்தியப் பேரரசர்களான விக்கிரமாதித்தன், சாலிவாகனன் ஆகியோர் பெயரில் இரு தொடர் ஆண்டுகள் நடைமுறையில் உள்ளன. இன்னும், பசலி வருடம், சக்கரபகவத்பாத வருடம், சிருஷ்டியாதி வருடம். ஹிஜிரி வருடம். ஆகியனவும் தொடர் ஆண்டாக அமைந்துள்ளன.

தமிழினம் உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்த நாகரிகச் சிறப்பும், இலக்கிய வளமும், விழுமிய பண்புகளும், காலத்தை விஞ்சும் தொன்மையும் நிறைந்த ஓர் இனம். ஆனால் தமிழினத்திற்கு ஒரு தொடர் ஆண்டு இன்றி நீண்ட காலமாக இந்துள்ளமை கவலைக்குரிய ஒரு விடயமாகும். இக்குறை தீர்க்கப் பல தமிழறிஞர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகள் தலைமையில் ஒரு மாநாட்டைக் கூட்டி தமிழர்களுக்கு உலகப் புகழை ஈட்டித் தந்த திருக்குறள் நூலை இயற்றிய திருவள்ளுவர் காலத்திலிருந்து தொடர் ஆண்டாக ஏற்பதென ஏகமனதாகத் தீர்மானித்தனர். இதனைத் தமிழ் இனம் ஏற்றுக் கொண்டது. இதனைத் தமிழக அரசும் 1971ஆம் ஆண்டில் ஏற்று அனுமதியும் வழங்கியது. திருவள்ளுவர் திருக்குறளை முப்பெரும் பகுதிகளாக அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என ஒவ்வொன்றும் பத்துக் குறள்கள் கொண்ட நூற்றி முப்பத்து மூன்று (133) அதிகாரங்களில் ஒருமித்து ஆயிரத்து முன்னூற்றி முப்பது (1330) குறள்களைப் பாடியருளிய தெய்வப் புலவராவார். கடந்த இரண்டாயிரம் (2000) ஆண்டுகளாக மக்கள் மத்தியில் திருக்குறளில் கருத்தொளி மங்காது பிரகாசித்துக் கொண்டிருப்பது அந்நூலின் சிறப்பாற்றலை எடுத்துக் காட்டுகின்றனது.

திருவள்ளுவர் கி.மு. 31ஆம் ஆண்டில் பிறந்தவர். இன்று நாம் அவர் தொடர் ஆண்டினை "திருவள்ளுவர் ஆண்டு 2039" (30+2008) என்று கூறுகின்றோம். இன்று சில தமிழ் ஊடகங்கள் இத் தமிழ் ஆண்டினையும் பாவனையில் சேர்க்கின்றன. இன்னும் முழு அளவில் திருவள்ளுவர் ஆண்டினைத் தமிழுலகம் கையாள முன்வரவேண்டும். இதை ஓர் உயிருட்டும் பணியென நினைந்து எல்லாத் தமிழ் ஊடகங்களும் ஒருமித்துச் செயலாற்றி முயற்சி தானே திருவினையாகும்.

2019 - 10 - 14

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது)
சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது)

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை
அரசுதவி பெறா தமிழ்த்துறை. சதக்கத் ஆய்விதழ் மற்றும் ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

இணைந்து நடத்தும்

நோக்கில் உலகத் தமிழர் பண்பாடும் வாழ்வியலும்

தொல்தமிழ்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்

VOLUME - VII சதக்கத் ஆய்விதழ் சிறப்புப் பதிப்பு அக்டோபர் 2019

தமிழ்த்துறை வெளியீடு

04.10.2019

SADAKATH – A RESEARCH BULLETIN ISSN NO. : 2347-7644
INDEXED IN GOOGLE SCHOLAR

"மீட்டெடுப்பில் மாநகர் மதுரை"

முனைவர் அ.மு.அயூப்கான்

மதுரை நீண்ட, தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்ட பழமையான நகரமாகும். மிகப் பழைய கற்காலம் முதல் அதாவது கி.மு. ஐம்பதாயிரம் (கி.மு.50,000) ஆண்டுகள் முதல் தற்போது வரையிலான வரலாற்று ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன. தமிழக சமூகப் பண்பாட்டு வரலாற்றில் நிகழ்ந்த அனைத்து முக்கியமான நிகழ்வுகளிலும் மதுரை பங்கெடுத்துள்ளது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனத் திணைகளையும் மதுரைத் தன்னகத்தே கொண்டு தனித்துவ மிக்கவையாக விளங்குகிறது. வைகை நதியும் மதுரை மக்களின் வாழ்வியல் ஆதாரங்களாகக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களான மதுரைக்காஞ்சி நெடுநல்வாடை, பரிபாடல் ஆகியவை மதுரை நகரத்தை மூதூர் என்றும் கூடல என்றும் குறிப்பிடுகின்றன. பரிபாடல் மருதத்துறையை (மருதை / மதுரை) வைகையாற்றின் துறையாகக் குறிப்பிடுகின்றது. இவ்விலக்கியம் மதுரையை ஆலவாய் என்ற பெயரிலும் வழங்குகிறது. ஆலவாய் என்பது பெரிய கோட்டையின் நுழைவாயில் அல்லது இரண்டு ஆறுகளுக்கிடையே உள்ள பகுதி எனப்படும். மதுரை வைகை ஆற்றுக்கும் கிருதமால் நதிக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. கௌடில்யர் எழுதிய வடமொழி நூலான அர்த்த சாஸ்திரம் மதுரையை மஸ்லீன் துணிகள் மற்றும் முத்து வணிகத்தின் மையமாகக் குறிப்பிடுகிறது.

மதுரைக்கு அருகேயுள்ள அழகர்மலை, மேட்டுப்பட்டி (சித்தர் மலை) தமிழி (தமிழ் - பிராமி) கல்வெட்டுகளில் (கி.பி.2ஆம் நூற்றாண்டு) மதுரை, 'மத்திரை' என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளது. மதுரைக்கு அருகில் உள்ள யானைமலை நரசிங்கப்பெருமாள் குடைவரைக் கோயிலிலுள்ள சோழ மன்னன் முதலாம் பராந்தகச் சோழனின் கல்வெட்டும் (கி.பி.10 ஆம் நூற்றாண்டு) மதுரை நகரை 'மதிரை' என்றே குறிப்பிட்டுள்ளன.

மதுரைநகரின் பெயருக்குரிய உரிய காரணங்கள் பலவாறு கூறினாலும் மதுரைப் பகுதியிலுள்ள தமிழி (தமிழ் - பராமி) கல்வெட்டுகளிலும் பற்கால கல்வெட்டுகளிலும் சுட்டப்படும் 'மதிரை' என்ற பெயரை மதுரை நகர் மற்றும் அதன் புறப்பகுதிகளை மதில் போல் சூழ்ந்துள்ள மலைகளோடு (அரை) தொடர்பு கொண்டு பார்க்கும் பொழுது இவ்வூர் மதில் போன்ற அரைகளால் (மலைகளால்) சூழப்பெற்ற ஊர் அல்லது நகரம் என்ற பொருளை உணர்த்துவதாக அமைகிறது.

மதுரையின் மற்றொரு பழம்பெயராகக் 'கூடல்' என்ப் புலவர்கள் கூடிய இடம் எனும் பொருளிலும் வழங்கப்படுகிறது. மதுரை நகரின் அமைப்பு முறையை ஆராய்ந்து

இணைப் பேராசிரியர், தமிழ்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

2019-20-15

நடுகல் வழிபாடுகள்

மு.சாதிக் அலி,

முன்னுரை

இலக்கியங்கள் அந்தந்தக் காலகட்டச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. அக்கண்ணாடியில் பல்வகை நிகழ்வுகள் தென்பட்டுள்ளன. தென்பட்ட நிகழ்வுகளுக்கு உருக்கொடுத்துப் பல்வேறு படைப்புகளும் இலக்கிய உலகில் தோன்றியுள்ளன. மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரிகம் மொழிச்சிறப்பு, நம்பிக்கைகள் முதலியவற்றை உள்ளடக்கிய கருவூலமாகவும் ஆராய்வதற்கேற்றச் சான்றாதாரமாகவும் அமைவன நமக்குக் கிடைக்கப் பெற்ற இலக்கியங்களே. அவ்விலக்கியங்களில் தென்படும் நடுகற்களையும் அது தொடர்பான மக்கள் தம் நம்பிக்கைகளையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நடுகல்

தமிழர் தம் வாழ்க்கையானது காதலையும் (அகம்) வீரத்தையும் (புறம்) அடிப்படையாகக் கொண்டது. வீரத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கும் போரில் வென்று இறந்தவர்களுமான வீரர்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் பொருட்டு எழுப்பப்பட்ட நினைவுச் சின்னமே 'நடுகல்' என்னும் வடிவம் பெற்றது.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் இறந்தவர்கள் நினைவாகக் கல்லெழுப்பும் மரபினைக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலும் தமிழ்நாட்டில் நிலவிய மரபினையே இவை காட்டியிருக்க வேண்டும். தமிழ் இலக்கியங்கள் காட்டும் இடச்சூழல்களிலேயே, தமிழ்ப் பகுதியில் அதிகளவில் வீரக்கற்கள் அமைந்துள்ளமை கவனத்திற்குரியது. இறந்தவர்கள் நினைவாக நட்ட கற்களைத் தமிழ் இலக்கியங்கள் 'நடுகல்' என்றே குறிக்கின்றன.

வீரர்கள் நினைவாக வீரக்கல் எழுப்பும் மரபு, உலகின் எந்தப் பாகத்தில் தோன்றியது எனத் திட்டமாகக் கூற முடியாவிட்டாலும் தமிழ்நாட்டுப் பகுதியில் இம்மரபு தோன்றியிருக்க வாய்ப்புண்டு எனத் தெரிகிறது.

நடுகல் - தோற்றம்

"கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தக் குடி" என தமிழ்க்குடியின் பெருமையைப் புறப் பொருள் வெண்பாமாலை கூட்டுகிறது. நம் தமிழ் மறவர்கள் தன் நாட்டைக் காக்கும் பொருட்டும் செல்வங்களைப் பசுக் கூட்டங்களைக் காக்கும் பொருட்டும் போர் செய்தனர். சிலர் வீரர்கள் அதில் உயிரிழந்தனர். அத்தகைய வீரர்களின் வீரச் செயல்களைப் போற்றி அவர்களின் நினைவாக ஒரு கல் நட்டு வழிபட்டனர். இதற்குச் சான்றாக

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி.

2019-20-16

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது;
சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது)

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ் மற்றும் ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை இணைந்து நடத்தும்

தொல்தமிழ்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்

VOLUME - VII | சதக்கத் ஆய்விதழ் சிறப்புப் பதிப்பு | அக்டோபர் 2019

தமிழ்த்துறை வெளியீடு

04.10.2019

SADAKATH – A RESEARCH BULLETIN ISSN NO. : 2347-7644
INDEXED IN GOOGLE SCHOLAR

தொல்தமிழ்

தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

பதிப்பாசிரியர்

முனைவர் ச.மகாதேவன்

தமிழ்த்துறைத் தலைவர்

இணைப்பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ.மு.அயூப்கான்

இணைப் பேராசிரியர்

முனைவர் அ.சே.சேக்சிந்தா

உதவிப் பேராசிரியர்

திரு செ.குமார்

உதவிப் பேராசிரியர்

திரு சாதிக்அலி

உதவிப் பேராசிரியர்

வெளியீடு

தமிழ்த்துறை

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர். திருநெல்வேலி - 627 011.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ் மற்றும் ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

04.10.2019

தலைப்பு	:	தொல்தமிழ்
பொருள்	:	தொல்லியல் நோக்கில் உலகத்தமிழர் பண்பாடு ஆய்வுக் கட்டுரைகள்
பதிப்பாசிரியர்	:	முனைவர்.ச.மகாதேவன் தமிழ்த்துறைத் தலைவர்
இணைப்பதிப்பாசிரியர்கள்	:	திரு.அ.மு.அயூப்கான் இணைப் பேராசிரியர் முனைவர் அ.சே.சேக்சிந்தா திரு.ஜெ.குமார் திரு. சாதிக் அலி உதவிப் பேராசிரியர்கள்
பதிப்பு	:	அக்டோபர். 2019
உரிமை	:	தமிழ்த்துறை. சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி)
ISSN	:	2347-7644 INDEXED IN GOOGLE SCHOLAR - VOL-VII - I
மொழி	:	தமிழ்
தாள். அளவு	:	காப்பியர்.
பக்கங்கள்	:	157
கணினி அச்சாக்கம்	:	கா.மானேந்தியப்பன் காசி கணினிக் கலையகம் 41, தெற்குக் கடைவீதி, பாளையங்கோட்டை செல்பேசி : 9443614556
பொறுப்புத்துறப்பு	:	இந்நூலில் உள்ள கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு அக்கட்டுரையாளர்களே பொறுப்பு.

பதிப்புரை

அடுத்து எடுத்து வைக்க வேண்டிய அடிகளை நேற்று நாம் எடுத்து வைத்த அடிகள் தீர்மானிக்கின்றன. ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வும் கீழடி அகழ்வாய்வும் இளைய சமுதாயத்தைத் தமிழ்ப் பண்பாட்டின் ஆதிவேர் நோக்கிப் பயணிக்க வைத்திருக்கின்றன. அதன் விளைவாகத் தொல்லியல் களங்களை நோக்கி இளையோர் பயணிக்கத் தொடங்கியுள்ளனர். 1876 இல் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த அறிஞர் ஜாகோர் ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வு நடத்தி 143 ஆண்டுகளுக்குப் பின்னர் அதே ஜெர்மன் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள தமிழ் மரபு அறக்கட்டளைத் தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்களோடு ஒன்றிணைந்து பன்னாட்டு ஆய்வறிஞர்களோடு திருநெல்வேலி சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரித் தமிழ்த்துறை "தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு" எனும் பொருண்மையில் 12-ஆவது கருத்தரங்கினை நடத்துகிறது. ஜெர்மனி, கனடா, மலேசியா, இலங்கை மற்றும் இந்திய நாடுகளைச் சார்ந்த தமிழ் ஆய்வாளர்களும் தொல்லியல் ஆய்வாளர்களும் தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாட்டினை அழகாக எடுத்தியம்பியுள்ளனர். இக்கருத்தரங்கின் அறிவிப்பை ஆறுமாதங்களுக்கு முன் நம் கல்லூரித் தமிழ்த்துறை மின்னஞ்சல் மூலமாக உலகத் தமிழர்களிடம் கொண்டு சென்றபோது கீழடி அகழ்வாய்வின் அறிக்கை வெளியிடப்படவில்லை. ஆய்வுக் கட்டுரைகள் அச்சுக்குச் செல்லும் இந்தநேரத்தில் உலகின் பண்பாட்டுத் தொட்டில் தமிழகம்தான் என்பதைத் தமிழ்நாடரசின் தொல்லியல் துறை வெளியிட்டுள்ள கீழடி வைகைநதிக் கரையில் சங்ககால நகர நாகரிகம் எனும் ஆவணம் தெளிவாக வரையறை செய்துள்ளது. அவ்வாவணத்தில் "தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், கொற்கை, அழகன்குளம், கொடுமணல், கரூர், தேரிருவேலி, உறையூர், மாங்குளம், பேரூர் மற்றும் பிற ஊர்களிலும் தொல்லியல் சார் இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும் குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தமிழகம் மட்டுமன்றி இலங்கையில் திசமஹரம, கந்தரோடை, மாந்தை, ரிதியகாமா போன்ற ஊர்களிலும் இதுபோன்ற குறியீடுகள் கிடைத்துள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்க எண்: 7) மூவாயிரம் ஆண்டுகளையும் கடந்த தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட உலகத் தமிழர் பண்பாட்டினை இன்னும் ஆழமாக நிறுவுவதற்கான ஆய்வுகளைத் தொல்லியல் துறையோடு தமிழ், வரலாறு, மானுடவியல், புவியியல், மண்ணியல் போன்ற பலதுறைகளும் இணைந்து செயல்படவேண்டிய கட்டாயத்தைத் தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு மீதான நெருக்கடிகள் நமக்கு உணர்த்துகின்றன. ஒவ்வோராண்டும் புதியபுதிய களங்களை நோக்கித் தமிழ்த்துறை பயணிக்க ஊக்கப்படுத்தும் கண்ணியத்திற்குரிய கல்லூரித் தாளாளர் அல்ஹாஜ் த.இ.செ. பத்ஹுஹீர் ரப்பானி அவர்கள், கண்ணியத்திற்குரிய கல்லூரி ஆட்சிக்குழுத் தலைவர் அல்ஹாஜ் பி.எஸ்.ஏ. பல்லாக் லெப்பை அவர்கள்,

தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு

முனைவர் ச.மகாதேவன்,

உலகின் முத்தகுடி தமிழ்க்குடி.இந்திய வரலாறு தமிழக வரலாற்றை அடியொட்டி மீண்டும் எழுதப்படவேண்டிய சூழலை சமீபத்தில் (செப்டெம்பர் 2019) தமிழ்நாடரசின் தொல்லியல் துறை வெளியிட்டுள்ள கீழடி குறித்த ஆவணப்பதிவின் மூலம் உணரமுடிகிறது. தமிழ், தமிழகம் கடந்த, நாடு கடந்த, கண்டம் கடந்த உலகமொழியாக விரிவதால் தமிழ்ப் பண்பாட்டின் வேர்களை உலகம் முழுக்கத் தேடவேண்டிய பெருமிதநிலை ஏற்பட்டுள்ளது. கடந்த கால வரலாற்றைத் தமிழினம் அறிந்தால் மட்டுமே எதிர்காலத்தில் நாம் பயணிக்க வேண்டிய இலக்கை நம்மால் தீர்மானிக்க முடியும். அதற்குத் தமிழர்கள் வாழும் உலகின் பகுதிகளில் எல்லாம் அகழ்வாய்வுகளையும் தொல்லியல் தடயங்களையும் தேடிப் பயணிப்பது அவசியம். மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நான்கு கட்டங்களாய் நடைபெற்ற அகழ்வாய்வுகளின் முடிவாக, அங்கே வாழ்ந்த தமிழர்களின் நகரவாழ்க்கைக்கான தொன்மை 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறிவியல் ஆய்வுகளால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஐந்தாம்கட்ட அகழ்வாய்வு தொடங்கப்பட்டுவிட்டது. சங்கஇலக்கியமான பரிபாடலில் விதந்தோம்பப்படும் வையை நதியின் கரையில் இருந்த நகர நாகரிகம் இன்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பல்துறை ஆய்வுகள்

தமிழ் இலக்கியத்தின் பின்னணியில் இன்னும் நிலவமைப்பின் அடிப்படையில் தேடுதல்களை மேற்கொண்டால் இன்னும் தமிழ்ப் பண்பாட்டின் காலத்தை இன்னும் இன்னும் முன்பாகக் கொண்டுசெல்ல முடியும். தமிழர் சமயங்கள் குறித்த ஆய்வுகளை இன்னும் ஆழமாக மேற்கொண்டால் உலகளாவிய அளவில் பரந்து விரிந்துள்ள தமிழர் பண்பாட்டின் வேர்களை இன்னும் துல்லியமாக வரையறுக்க முடியும்.

தமிழகம் எனும் சொல்லாக்கம்

புறநானூறு இலக்கியத்தில், கருவூர்கந்தப்பிள்ளை சாத்தனார் பாடிய 168 ஆம் எண்ணுள்ள பாடலில் " அருவி ஆர்குங் கழைபயில் நனைந்தலை" எனத் தொடங்கி " வையக வரைப்பில் தமிழகம் கேட்ப"1 "தமிழகம்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது மொழியின் அடிப்படையில் பெருநிலத்திற்குப் பெயர் சூட்டிய தமிழ்ப் புலவரின் அறிவாற்றலை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

திணைக்கோட்பாடு

சங்கஇலக்கியம் தமிழரின் ஐந்துதிணைகள் சார்ந்த திணைக்கோட்பாட்டை முன்வைத்ததையும் , அது செய்த அகம்புறம் வரையறையையும், அந்த நிலத்தில்

தமிழ்த்துறைத் தலைவர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

2019-20-17

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹிமத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது. சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2015 பெற்றது.)

ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

பன்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில்

அரசுதவி பெறும் தமிழ்த்துறை, அரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு

பன்னாட்டுக் கருத்தரங்கப் பாராட்டுச் சான்றிதழ்

கல்லூரித் தமிழ்த்துறையும் ஜெர்மன் தமிழ் மரபு அறக்கட்டளையும் இணைந்து **04.10.2019** அன்று நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில்

முனைவர் செ. செல்வசுகன்யா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

தொல்லியல் நோக்கில் தமிழர் வரலாற்றுத் தடயங்கள்

எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கியமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவருடைய ஆய்வுக் கட்டுரை சதக்கத் ஆய்விதழில் (ISSN:2347-7644 INDEXED IN GOOGLE SCHOLAR - VOL-VII - I) இடம்பெற்றுள்ள

முனைவர் ச.மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் மு.முஹம்மது சாதிக்
முதல்வர்

முனைவர் க. சுபாஷிணி
தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை

தொல்லியல் நோக்கில் தமிழர் வரலாற்றுத் தடயங்கள்

முனைவர் செ. செல்வகுகன்யா

முன்னுரை

தமிழக மக்களின் வாழ்வியலைப் பற்றிய ஆராயச்சிக்கு தேவைப்படும் மூலங்களைத் தெளிவாகவும் மிக எளிய முறையிலும் வகைப்படுத்தலாம். பழமையான செய்திகளைப் பற்றிய ஆய்வுகளை நாம் அறிவியல் ஆய்வு என்று கூறலாம். சிறப்பாகத் தென்னிந்திய வரலாற்றிற்குப் பயன்படும் மிக விரிவான நம்பத்தக்க மூலம் பண்டைய எழுத்துப் பொறிகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், உலோகத்திலான காசுகள், சுட்ட மண்பானைகள், கட்டட இடுபாடுகள், இலக்கிய மூலங்கள், மரபுச் செய்திகள் என்பனவாகும். இத்தகைய மூலங்களின், மூலம் தொல்லியல் அகழாய்வுகளினால் நமது முன்னோர்களின் வாழ்வியல் நிலை மற்றும் பொருளாதார நிலை பற்றியும் நம் தமிழர்கள் பிற நாட்டினரோடு செய்த வாணிப முறைகள் பற்றியும் நதிக் கரையில் வாழ்ந்த மக்களின் தொல்லியல் எச்சங்கள் குறித்தும் உலகம், உலகப் பொருளகள் சார்ந்த தொன்மைக் கூறுகள் குறித்தும் இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

தொல்லியல் விளக்கம்

கேள்விகளே அறிவின் விழிப்பு நிலை. இத்தகைய விழிப்பு நிலைகளை அகழாய்வுகள் மூலம் தான் கண்டறியமுடியும். தொல்லியலை Archaeology என்று கூறுவர். பழங்காலத்தைப் பற்றிய அறிவியல் ஆய்வு என்று கூறினால் சிறப்பாகப் பொருந்தும். தொல்லியல் ஆய்வு என்பது, பூமிக்கு அடியில் மண்ணில் புதையுண்டு கிடக்கும் பொருட்களை இயந்திரங்கள் பயன்படுத்தாமல் சிறு கருவிகள் கொண்டு சிறுகச் சிறுகத் தடயங்களைச் சேகரிப்பது ஆகும். தொன்மங்கள் என்பது மக்கள் வழக்காற்றில் நிலைத்த இடத்தைப் பெற்று, தனித்தன்மையுடன் விளங்குகின்றன.

இத்தொன்மங்களின் உருவாக்கம் மற்றும் வாழ்வுநிலை குறித்த செய்திகள் இன்றைக்கும் பல்வேறு ஆய்வுக் களங்களைக் கொண்டிருக்கின்றன. சங்க இலக்கியத்தில் ஏராளமான தொன்மக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம் சங்க கால மக்களின் வாழ்வியல் மற்றும் வணிகம் சார்ந்த நிகழ்வுகள் கண்டுணரப்படுகின்றன.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கிடைக்கப்பெற்றத் தொல்பொருட்கள் அறிவியல் முறைப்படி கால நிர்ணயம் செய்படுகின்றன. அகழ்ந்தெடுத்தப் பொருட்களை மனித இன்பத்தோடு தொடர்புப்படுத்தி எக்காலத்தைச் சார்ந்தது என்று ஆய்வு செய்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, (அரசுதவி பெறா) சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)

ஆற்றல் மிகுந்த தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டு முன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020, தமிழ்நாடு, இந்தியா

பொருண்மை :

பன்முகத் தளத்தில்
தமிழியல்

நாள் : 28.11.2019 (மியமுக்கிழமை)

UGC

முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி மற்றும்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் இணைந்து

பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்
- பன்னாட்டுக் கருத்தரங்கம் -

வளநபர்ச் சான்றிதழ்

திரு / திருமதி / செல்வி முனைவர் கா. அந்தோணி சீலன்,
உதவிப் பேராசிரியர், சிதக்கத்துல்வாஸ் அப்பா கல்லூரி அவர்கள்

_____

_____ என்னும் தலைப்பில்

கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் க. சிவராஜ் தீபன்
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
& செயலர்

முனைவர் அ. [illegible]
தமிழ்த்துறைத்தலைவர் மற்றும்
கல்லூரி முதல்வர்

முனைவர் S. இப்ராஹிம் முகைதீன்
முதல்வர்

Dec 19-20-18

பரத்தையர் பாடல்களும் சமூகநிலையும்

முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி),
ரஹ்மத் நகர், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

ஓர் ஆண்மகன் பல பெண்களை நாடுதல் சமுதாயத்தால் அன்று அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கமாகவே இருந்துள்ளது. பெண்ணினத்தில் ஒரு பகுதியினர் விலைமகளிராக ஆண்களின் தேவையை நிறைவேற்றிப் பிழைப்பு நடத்துபவராகவும் இருந்திருக்கின்றனர். தன் உடல் ஆசையை மட்டுமன்றி தன்னை நாடி வரும் ஆடவர்களின் உடல் ஆசையைத் தீர்த்துவைக்கும் பாத்திரமாக அன்றைய சமூகத்தில் பரத்தை படைக்கப்பட்டுள்ளாள். அவள் கூற்றுப் பாடல்களின் வழி அறியலாகும். சமூகநிலை குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தலைவன் பரத்தையை நாடிச் செல்லக் காரணம்

சங்க காலம் என்பது போர்நிறைந்தகாலம். அக்காலத்தில் ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கை அதிகமான அளவில் காணப்பட்டன. அப்பெண்களில் பலர் திருமணம் ஆகாத நிலையில் தங்கள் உடல் ஆசையினை நிவர்த்திச் செய்து கொள்ளும் பொருட்டு பரத்தமைத் தொழிலை ஆரம்பித்திருக்கலாம்.

களவுக்காலத்தில் தலைவன் தலைவி இருவரும் களவு இன்பத்தினை நுகர்வர். அப்போது தவிர்க்க முடியாத சூழலில் தலைவன் காமப்பசியின் மிகுதியால் தலைவியை உடல் அளவில் இன்பம் நுகர ஆசைப்படுவான். அப்போது அந்த ஆசை நிறைவேறாது. பரத்தையை நாடிச்செல்வோரும் உண்டு.

கற்புக்காலத்தில் தலைவன் தலைவியிடம் வழிக்கொண்டு உடல் ஆசையினை நிவர்த்தி செய்யப் பரத்தையை நாடிச்செல்வான்.

தலைவன் தலைவி இருவரின் கற்பு வாழ்விலும் அவர்களுக்குக் குழந்தை பிறந்து தலைவி வெள்ளணி பூண்ட போது தலைவன் தன்னுடைய காமப்பசியினைத் தீர்க்கத் தலைவியை நாடுவான். தலைவி அப்போது அவனுடைய காமப்பசியினைத் தீர்க்காது, தன் குழந்தையைப் பாதுகாப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்துவாள். அத்தருணத்தில் தலைவனின் காமப்பசி அதிகமாகவே, அதனைத்தீர்த்துக் கொள்ள நடுஇரவில் பரத்தையின் இல்லத்தினை நாடிச் சென்றான் என்பதை.

"நெடுநா ஒள்மணி கடி மனை இரட்ட
குரை இலைப்போகிய விரவு, மணற்பந்தர்
பெரும்பாண் காவல் பூண்டென, ஒருதார்
திருந்து இழைமகளிர் விருச்சிநிற்ப,
வெறி உற விரிந்த அறுவை மெல் அணைப்
புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச,
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர்இமை பொருந்த,
நள்ளென் கங்குல், கள்வன் போல,
அகன்துறை ஊரனும் வந்தனன் -
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே"

என்ற கோண்மா நெடுங்கோட்டனார் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

பரத்தையின் செயல்

பரத்தை என்பவள், பிறரைக் கவர்ந்து தன்னிடம் ஈர்த்துக் கொள்ளும் தன்மை உடையவளாகக் காணப்படுவாள். பிறரைத் தன்பால் ஈர்த்துக்கொள்ள எப்போதும் தன்னை அழகுப்படுத்திக் கொண்டே இருப்பாள்.

ஆய்த எழுத்து
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
UGC - மானியக்குழு மாண்பு குழுவின் அங்கீகாரம் பெற்றது

AN INTERNATIONAL JOURNAL
FOR TAMIL STUDIES
ISSN : 2278-7550
UGC RECOGNIZED JOURNAL
UGC NO : 42330

சான்றிதழ்

ஜனவரி - 2019

திரு/திருமதி/செல்வன்/செல்வி முஃ.சாதிக் அலி

அவர்களால் எழுதப்பட்ட

பாவண்ணன் சிறுகதைகளில் அறச் செயல்கள்

என்னும் ஆய்வு கட்டுரை இவ்விதழில் பிரசுரமாகி உள்ளது.

பல்லவி பதிப்பகம்
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில், ஈரோடு - 11.
பேச : 0424-2251545, 94422 51549, 97919 51549, 63817 01339
www.pallavipathippakam.in Email:pallavipublications@gmail.com

Scanned with CamScanner

பாவண்ணன் சிறுகதையில் அறச்செயல்கள்

"முனைவர் [illegible] ஆய்வாளர், [illegible] கல்லூரி, திருநெல்வேலி

முன்னுரை

[illegible] இல்லை என்றார் திருவள்ளுவர். அறச்செயல்களைச் செய்து [illegible] இல்லாத இல்லாதவர்கள் [illegible] அறக்கருத்துகளையே [illegible] [illegible] கிடை, போன்ற புனிதநூல்கள் [illegible] அறக்கருத்துகளை [illegible] நோக்கமாக கொண்டுள்ளன.

"[illegible] கொடுத்தோர்
[illegible] கொடுத்தோரே"

என்கிறது மணிமேகலை காப்பியம். நமக்கு இயன்ற உதவிகளை பிறருக்கு செய்வதே அறச்செயலாகும். உதவி செய்ய முடியவில்லை யென்றால் தீங்கு செய்யாமலாவது இருக்க வேண்டும். அதுவே மிகச் சிறந்த அறம்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறம்"

என்கிறார் வள்ளுவர். புறநானூறும் பாடும்.

"நல்லது செய்து மாண்டி னாயினும்
அல்லது செய்து வீழ்மதி வருதலான்"

என்று அதே கருத்தைக் கூறுகிறது. அறம் என்பதற்கு அறிஞர்கள் பலரும் பல விளக்கமளித்தாலும் மிகச் சிறந்த அறம் எனது இதுதான் என விளக்கும் அளவிற்கு நம்மிடம் சரியான வரைபடங்கள் இல்லை. ஆயினும் பாரதி தன் கவிதையில்

"அன்னை சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம்
பதினாயிரம் நாட்டல் பிள்ளைகளுள்ள தருமங்கள் யாவும்
பொய்யின்றிக் ஒளிர் நிறுத்தல், அன்னையாவினும்
புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்கிறார். அறம் எனது ஒவ்வொருவரின் பார்வையிலும் வேறுவேறு பொருள் பட்டாலும் அவை அனைத்தும் நம் தொன்மையான தமிழ் இலக்கியங்களிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன எனது நமக்கு கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும். அத்தொன்மையான தமிழ் இலக்கியத்தில் ஒரு சிறுகதை இலக்கியத்தில் ஆசிரியர் பாவண்ணன் தம் சிறுகதைகளில் அறக்கருத்துகளை பதிவு செய்துள்ள விதத்தை இக்கட்டுரையில் காணலாம்.

பாவண்ணன்

எழுத்தாளர் பாவண்ணன் அவர்கள் பதினாறுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள் உட்பட மொத்த நூல்களுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்திருந்தாலும் அவருடைய பச்சைக்கிளி எனும் சிறுகதைத் தொகுப்பை மட்டும் ஆய்வுக்குள்ளாக்கி அத்தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள அறச்செயல்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வெளிச்சத்தைக் கொண்டு வருபவன்

பாவண்ணனின் பச்சைக்கிளிகள் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள சிறுகதை வெளிச்சத்தைக் கொண்டு வருபவன்.

கலக்பாளையம் என்ற தங்கிய கிராமத்திலுள்ள பள்ளிக்கு இடம் மாறுதலில் வந்த ஆசிரியர் ராகவராஜன் முதல் நாள் வகுப்பில் மாணவர்கள் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைகிறார். பழுதுபட்ட மாணவர்கள் கருகிலுள்ள செங்கல் சூளைக்கு வேலைக்குச் சென்றதை நினைத்து வருத்தப்படுகிறார். செங்கல் சூளைக்குச் சென்று மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோரிடமும் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குகிறார். பள்ளிக்கூடம் வராமல் சாராயம் விற்கும் மாணவர்களுக்கும் கல்வியின் முக்கியத்துவத்தை விரிக்கிறார். அதனால் கோபமடைந்த சாராய வியாபாரிகளால் ஆசிரியர் தாக்கப்படுகிறார். ஆசிரியரின் விடாமுயற்சியால் மாணவர்களுக்கு பயம் மிகு ஆரம்பம் வரவே அனைவரும் நன்கு படித்து உயர் நிலையிலும், மேல்நிலையிலும் தேர்ச்சியடைந்து உயர் கல்வி கற்கின்றனர். சில மாணவர்களுக்கு அரசு வேலையும் கிடைத்ததால் அக்கிராமமே ஆசிரியரைக் கொண்டாடுகின்றது.

தூய யோவான் கல்லூரி

ST. JOHN'S COLLEGE

மற்றும்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

ஆண்டுக்கால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (IJTLLS)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும்

CONSTRUCTION AND DECONSTRUCTION OF FEMINISM IN TAMIL LITERATURE

சான்றிதழ்

முனைவர்/திரு/திருமதி/செல்வி. மு. சாதிக் அலி, உதவிப் பேராசிரியர், தெக்கத்தூவ்வாஷ் அப்பா கல்லூரி, அவர்கள் தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும் என்னும் பொருண்மையில் தூய யோவான் கல்லூரி மற்றும் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் 28.02.2020 அன்று இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்று பெண் ஆளுமைகளில் விதவைப் பெண்களின் பிரச்சனைகள் என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கி சிறப்பித்தார் என்று சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் ந. தூய கேவைடி, (முதல்வர்) கருத்தரங்கத் தலைவர் தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி	முனைவர் செ. கிறிஸ்டிய ஜெபராஜ் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி	திருமதி தமிழ்செல்வி பதிப்பாசிரியர் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், விருதுநகர்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Lingual Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140
Vol. 2, Special Issue 3, Vol. 1 February- 2020

Available at: www.ijtlls.com

பெண் எழுத்துகளில் விதவைப் பெண்களின் பிரச்சனைகள்

Problems of Widows in the Writings of Women

முனைவர் அ.ஜ. உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி - 11.

Abstract

The problems faced by the widows of any society are numerous and very sad to see it. Tamil society is not an exception of it. Many widows suffer under male suppression and cunningness. These were potrayed by excellent women writers nowadays. Mrs. Rajeswari Bala Subramaniam is one of such active women who writes on the themes of the sufferings of the widow women. Hence, the idea got sprouted to bring out the pangs of the women as widows in the society to be potrayed for knowing the situation of them and the remedy of it.

Keywords: Problems of Widows, Writings of Women, Mrs. Rajeswari Bala Subramaniam

திருமதி.இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் என்பவர் அமெரிக்காவில் வாழும் தமிழ் பெண் படைப்பாளி. இவர் கோவையில் வாழும் கி.பழனிச்சாமி என்ற ஞானி அவர்களுடன் சிறுகதைப் போட்டிகளை நடத்தி ஆண்டுதோறும் சிறுகதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டு வருகிறார். அந்த தொகுப்பில் உள்ள விதவைப் பெண்கள் பற்றியச் சிறுகதைகளை ஆய்வதேக் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கணவனை இழந்தப் பெண்ணை விதவை என்று கூறுவர். மேலும் அப்பெண்களை கைம்பெண்கள், கைம்மை மகளிர், மூளி, அமங்கலி, கரிமுண்டை, தூர்கிரி, கழிசடை, நாலியறுத்தவள், அறுதலி என பலவாறு சுட்டப்பெறுகின்றனர். விதவைப் பெண்கள் கணவனை இழந்ததோடு தங்களுடைய சுகங்களையும், இனிய உணர்வுகளையும், சமுதாயத்தகுதிகளையும் இழந்து குடும்பத்தாலும், சமூகத்தாலும் வெறுக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வாழ்க்கையில் பெரும் போராட்டத்திற்கு ஆளாகிறார்கள். இந்தப் பிரச்சனைகளை பெண் எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துகளில் எவ்வாறு பதிவுசெய்கிறார்கள் என்பதை கீழ்க்காணும் முறையில் காணலாம்.

விதவை பெண்களின் பிரச்சனைகள்

1. விதவைச் சடங்குகள்
2. விதவைகள் புறக்கணிக்கப்படுதல்
3. விதைவைகளுக்கு ஆதரவு இன்மை
4. விதவைகளின் பாலியல் சிக்கல்கள் எனப் பிரிக்கலாம்.

விதவைச் சடங்குகள்

விதவைச் சடங்குகள் சமய நம்பிக்கை சார்ந்து ஏற்படுத்தப்பட்டவை ஆகும். இச்சடங்குகளின் போது மகளிருக்குப் புனைவிக்கப்படும் அவலத்தோற்றமே வீட்டை விட்டு வெளியே வரவிடாமல் அவர்களை வீட்டினுள் முடங்கச் செய்கிறது. விதவையர் நிலையில் மிகக் கொடுமையானது இந்தக் கைம்மைக் கோலம். விதவையரின் அழகிய தோற்றங்கண்டு ஆடவர்கள் விருப்பம் கொள்வதைத் தடுப்பதற்கும், மறுமணம் செய்யும் எண்ணம் அவர்களுக்கு ஏற்படாமல் விலக்குவதற்கும் புறக்கோலங்களில் மாற்றங்களைச் செய்யும் வழக்கம் சமுதாயத்தில் நிலவி வந்திருக்கிறது. "கனாக் காலம்" கதையில் வரும் கல்யாணிக்கு இருபத்தி இரண்டு வயது திருமணம் முடித்து ஓர் ஆண்டுக்குள் கணவன் இறந்து விடுகிறான்.

Vol. 2 2020-21-2 Special Issue - 4 March 2020
E-ISSN : 2581 - 7140
INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES
A Bi - yearly Peer - Reviewed International Journal

மற்றும்

திருவள்ளுவர் கல்லூரி

(தேசிய தரமதிப்பீட்டில் B ++ தகுதிபெற்றது)
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் – 627 425)

தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

இலக்கியங்களில் மருத்துவச் சிந்தனைகள்

Certificate

of Publication

We hereby certify that

முனைவர் ந. உமாதேவி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ராஜா நகர்.

In recognition of the Publication of the Paper Entitled

விவேக சிந்தாமணியும் மருத்துவமும்

Published in

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE & LITERARY STUDIES

முனைவர் இரா. வரலெஷ்மி அமைப்பாளர்	முனைவர் சு. சிவசங்கர் துறைத்தலைவர்	முனைவர் சு. சுந்தரம் முதல்வர்

திருமதி. த. மகேஸ்வரி
இயக்குநர் & பதிப்பாசிரியர் (IJTLLS)

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

A Bi-Yearly Peer-Reviewed International Journal

மற்றும்

திருவள்ளுவர் கல்லூரி
பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம்

THIRUVALLUVAR COLLEGE
Papanasam, Tirunelveli District

இணைந்து நடத்தும்

தேசியக் கருத்தரங்கம்

நாள் : 24.03.2020

நிகழிடம் : அடிகளார் அரங்கம்

இலக்கியங்களில் மருத்துவச் சிந்தனைகள்
THOUGHTS OF MEDICINE IN LITERATURE

தொகுதி - 2, சிறப்பிதழ் 4 : தொகுதி - 1, மார்ச் 2020

Vol – 2, SPECIAL ISSUE 4 : VOL – 1, MARCH 2020

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களை ஒதுக்கி செயலாகும் அரசாங்கம் பள்ளியும் ஆகாவிடில்

43

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140
Vol. 2, Special Issue 4, Vol. 1 March- 2020 Available at: www.ijtlls.com

விவேக சிந்தாமணியும் மருத்துவமும்

Medical Diagnosis and *Viragachinthamani*

முனைவர் ந.உமாதேவி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி.

Abstract

"Vivegachinthamani" is a book of ethical truths. It has lots of ideas on medical diagnosis and curing methods. The medical methods are resourceful in the medical insights. So, the article delineates the medical methods.

Keywords: Medical Diagnosis, "Vivegachinthamani".

முன்னுரை

இன்றைய சூழ்நிலையில், மனிதர்கள் அனைவருக்கும் உளவியல் தொடர்பான வழிகாட்டுதல்கள் இன்றியமையாதத் தேவையாக உருவெடுத்துள்ளன. நண்பர்கள், உறவினர்கள் எனப் பலருக்குமிடையே நம்பிக்கைத் துரோகமும் ஏற்றத் தாழ்வுகளும் ஏமாற்றங்களும் அதிகரித்து வருகின்றன. இவற்றைத் தவிர்க்க எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்வதே நன்மையளிக்கும். உளவியல் பாதிப்பு ஏற்படாத வகையில் கடைப்பிடிக்க வேண்டிய பல ஆலோசனைகளை "விவேக சிந்தாமணி" என்னும் நூல் அறிவுறுத்துகிறது. அவற்றில் சிலவற்றை இக்கட்டுரை ஆய்கிறது.

விவேக சிந்தாமணி என்னும் நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 135 பாடல்களைக் கொண்டது. வெண்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம் முதலிய பாக்களைக் கொண்டது. நீதியோடு மிகக்குறைவான அகப்பொருளையும் கூறும் நூல். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் அனுபவத்தின் வெளிப்பாடு. இப்பாடல்களைப் படிக்கும் மனிதர்கள் அனைவரும் தம் வாழ்க்கை நிலையும் பாடல் கருத்துக்களும் எந்த அளவிற்கு ஒத்துப் போகின்றன என்று உற்று நோக்கும் விதமாக பாடல்கள் அமைந்துள்ளன.

நோய் வருவதற்கான காரணங்கள்

நோய் வராமல் இருக்க வேண்டும் என்றால் நல்ல உணவினாலும் செய்யும் உடற் பயிற்சியாலும் உடலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தன் சக்திக்கு மேல் உடலைத் துன்புறுத்தி உழைப்பது கூடாது. உள்ளத்தில் கவலைகள் வந்து சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய உடலுக்குள் மல ஜலங்களைச் சேர்த்து வைத்தல் கூடாது. தன்னுடைய உடம்பிற்குத் தேவையானதை விட மிகக் குறைவான உணவையே உண்ண வேண்டும். தலை நனையாமல் குளித்தல் கூடாது. அறத்தை இகழ்ந்து பேசாமல் இருக்க வேண்டும். இவையெல்லாம் செய்தால் உடலில் நோய் உண்டாகாது என்ற கருத்துக்களை,

> **தன்னைத்தான் பேணா தாலும் சரீரத்தின் தண்டிப் பாலும்**
> **மின்னுற்ற விசாரத் தாலும் பின்சல மலத்தி னாலும்**
> **அன்னத்தை ஒறுப்ப தாலும் அரையுடல் முழுக லாலும்**
> **தன்மத்தை இகழ் தாலும் சரீரத்தில் வியாதி தோன்றும் (வி.சி.பாகம் 2 – பா.எ.85)**

என்ற பாடல் மூலம் விவேக சிந்தாமணி கூறுகிறது.

செல்வச் செருக்கு என்னும் நோய்

தினமும் பெருகி வரும் செல்வம் என்னும் நோய் ஒருவனுக்கு வந்துவிட்டால் அந்த நோய், உற்றார் உறவினர் நண்பர் என்று யாரையும் பார்ப்பது கிடையாது. நான், பணக்காரன் என்ற செல்வச் செருக்கு என்னும் நோய் வந்து விட்டால் அதற்குரிய மருந்து பற்றி எந்த மருத்துவ

தூய யோவான் கல்லூரி

ST. JOHN'S COLLEGE

மற்றும்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அரையாண்டு உறுப்பு செய்யப்பட்ட அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (IJTLLS)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும்

CONSTRUCTION AND DECONSTRUCTION OF FEMINISM IN TAMIL LITERATURE

சான்றிதழ்

முனைவர்/திரு/திருமதி/செல்வி. அ. சே. சேக் சிந்தா, தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திரு-ம. அவர்கள் தமிழ் இலக்கியங்களில் பெண்ணிய கட்டமைப்பும் கட்டுடைப்பும் என்னும் பொருண்மையில் தூய யோவான் கல்லூரி மற்றும் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் 28.02.2020 அன்று இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்று 'கிடுகோள் மானுடர்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கி சிறப்பித்தார் என்று சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் S. ஜான் பெனிஷ், (ஓ.)
கருத்தரங்க தலைவர்
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, தி.நெல்வேலி

முனைவர் ஆ. [illegible]
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி

[illegible]
இதழாசிரியர்
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், சென்னை

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

A Bi-Yearly Peer-Reviewed International Journal

மற்றும்

தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்

ST.JOHN'S COLLEGE
Palayamkottai, Tirunelveli District

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

நாள் : 28.02.2020

